வர்கள்; அவர் ஒரு ஸிந்தீக் என்று கூறியதாக 'அல் கவாகிபுஸ் ஸாஹிரா ஃபீ இஜ்திமாயில் அவ்லியாயி யகழதன்' என்னும் நூலின் 245ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் ஹிஜ்ரி 865ல் பிறந்து ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றி வாழ்ந்த ஓர் பிரபலமான அறிஞராகும்.

நம்மிடமுள்ள இந்நூலானது 1999ம் ஆண்டு தாரு ஜாமியில் கலிம் என்னும் நூலகத்தினரால் பிரசுரிக்கப்பட்டதாகும். இந்நூலை கலாநிதி முஹம்மத் ஸெய்யித் சுல்தான், கலாநிதி அலி அப்துல் ஹமீத் ஈஸா ஆகியோர் உறுதிப்படுத்தியதை கலாநிதி அப்துல் காதிர் ஹுஸைன் என்பார் அதற்கு முஷ்ரிபாக இருந்துள்ளார். இவர்களனைவரும் அல் அஸ்ஹர் பல்கலை கழகத்தின் பேராசிரியர்களாகும். இந்நிலையில் சுல்தானுல் உலமாவுடைய கருத்துக்களை கையாண்டவர்கள் கூட இக்கருத்தை தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளதாக நமது பார்வைக்கு இதுவரை கிடைக்கவில்லை. சுல்தானுல் உலமா அவர்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா அஷ்ஷெய்கு அபுல்ஹஸன் அஷ்ஷாதுலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் தோழமையை பெறுவதற்கு முன் சொல்லப்பட்டதாகும் என்று அஷ்ஷெய்கு அல்லாமா தாஜுத்தீன் பின் அதாவுல்லாஹ் அஸ்ஸிக்கந்தரி அவர்கள் லதாயிபுல் மினன் என்னும் நூலில் கூறுகின்றனர். அவ்வாறாயின் இவர்களுடைய ஷெய்கான ஷாதுலி நாயகம் அவர்கள் அப்படியொரு வார்த்தையை சொல்லியிருக்க மாட்டார்கள் என்பதை நன்கு தெரிந்து கொள்ளுங்கள். எனவே ஷெய்குல் அக்பரை குறித்து இமாம் ஷாதுலி நாயகம் அவர்கள் கூறியதாகச் சொல்லப்படும் இக்கருத்தை நாம் ஆதாரமாக எடுக்க முடியாது என்பதே இதற்குரிய தீர்ப்பாகும்.

لم يصل الي ما نسب اليه من الشعر عنه بسند صحيح ونحن لا
نكفر بامر محتمل سيما ولا فائدة في تكفيره وانما
الفائدة فى التنفير من المقالة.

"மேலும் இப்னு பாரிழ் அவர்கள் கூறியதாக நமக்குக் கிடைத்த கவிதைகள் அதனை அவர்கள் தான் கூறினார்கள் என்பதற்கு நம்பத்தக்க ஸனதுக்குரிய ஆதாரங்கள் என எதுவும் கிடைக்கவில்லை. பின்னும் பல்வேறு விளக்கங்களுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு விஷயத்தை வைத்துக்கொண்டு நாம் காபிரென்று சொல்ல மாட்டோம். காரணம் அவரை காபிரென்று சொல்வதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அதற்கு மாறாக அவரது கருத்துக்க



ளிலிருந்து (ஜனங்களை) தூரப்படுத்துவதில் தான் பிரயோஜனமுண்டு" என்பதாக பிரபல வரலாற்றாசிரியர் ஹாபிழ் சகாவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'அழ்ழெளவுல் லாமிஃ' என்னும் நூலில் 1-108ல் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் ஷெய்குல் அக்பரைப் பற்றி 'அல் கௌலுல் முனப்பிஃ ஃபீ தர்ஜமதி இப்னி அரபி' என்னும் பெயரில் நூல் ஒன்றையும் தொகுத்தவராகும். அந்த நூல் தற்போது நம்மிடம் இல்லையாதலால் அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் என்ன என்பதை சொல்ல முடியாவிட்டாலும் கூட 'வரஃயுஹு ஃபீஹி கரஃயிஹி ஃபிப்னி ஃபாரிழி தக்ரீபன்' இப்னு பாரிழ் அவர்களின் அபிப்பிராயம் எதுவோ அதே அபிப்பிராயத்தையே இப்னு அரபி பற்றி ஹாபிழ் சகாவி அவர்களும் கொண்டிருந்ததாக அஷ்ஷெய்கு முஹம்மத் ஸாஹித் கௌதரி அவர்கள் தமது மகாலாவின் 256ம் பக்கத்தில் கூறியிருப்பது மிக மிகக் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

அடுத்து ஷெய்குல் அக்பரை புகழ்ந்து பேசியதாகக் கூறப்படும் பெருமக்களில் இமாம் சுப்கி, நவவி, ரமலி போன்ற புகஹாக்கள் உள்ளனர். இவ்வாறே இமாம் சுயூத்தி, ராஸி போன்ற முபஸ்ஸிரீன்கள் இருந்திருப்பதை போன்று இமாம் இப்னு ஹஜர் போன்ற முஹத்திஸீன்களும் இமாம் தஹபி போன்ற ஜர்ஹ் தஃதீலுடைய உலமாக்களும் சகாவி, தஹபி போன்ற வரலாற்றாசிரியர்களும் காணப்படுகின்றனர். இவர்களனைவரும் ஷெய்குல் அக்பருடைய கருத்துக்களிலிருந்து பாமரர்களை தூரப்படுத்த வேண்டுமென்பதில் கவனமாக இருந்துள்ளனர் என்பது இவர்களின் கருத்துக்களை கொண்டு நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

وبالجملة فما انكر على الشيخ الا بعض الفقهاء القح الذين لا حظ
لهم في شرب المحققين واما جمهور العلماء والصوفية فقد اقروا
بانه امام اهل التحقيق والتوحيد وانه فى العلوم الظاهرة فريد وحيد.

"ஆக மொத்தத்தில் சூபிய்யாக்களின் பானத்தை அருந்தும் பாக்கியமற்ற சில புகஹாக்களே இவரை எதிர்க்கின்றனரே அன்றி மற்றபடி அனைத்து உலமாக்கள் மற்றும் சூபிய்யாக்களுடையவும் ஏகோபித்த தீர்க்கமான முடிவு என்னவெனில், அவர் இமாமுத் தௌஹீதி வத் தஹ்கீகி என்பதேயாகும். அத்துடன்

**வெளிப்படையான விஷயங்களிலும் அவர் ஓர் நிகரற்ற மாமனித ராகும்"** என்னும் அல்லாமா பைரூஸாபாதியின் கருத்தே இவரை குறித்த இறுதி முடிவாகும்.

## ஷெய்குல் அக்பரும் அவரது நூல்களும்

1. அஷிய்யதுன் நுஸூஸி ∴பீ ஹத்கில் ∴புஸூஸி : அல் வாஸிதீ மறைவு ஹிஜ்ரி 711.

2. ரிஸாலதுன் பிஸ்மில் மஸிகின் நாஸிரி ∴பிர்ரத்தி அலஷ் ஷெய்கி முஹ்யித்தீனி : அல் பைரூஸாபாதி மறைவு 811.

3. தஹ்தீருன் நபீஹி வல் கபிய்யி மினல் இ∴ப்திதானி பிப்னி அரபி : அத்தகிய்யுல் பாஸி மறைவு 832.

4. கஷ்புல் கிதா அன் ஹகாயிகித் தௌஹீதி வ அகாயிதில் முவஹ்ஹிதீன் : அல் அஹ்தல் மறைவு 855.

5. தன்பீஹுல் கபிய்யி இலா தக்∴பீரி இப்னி அரபி : அல் பகாயி மறைவு 885.

6. தன்பீஹுல் கபிய்யி பி தப்ரிஅதி இப்னி அரபி : அஸ் ஸுயூத்தி மறைவு 911.

7. தன்பீஹுல் கபிய்யி ∴பீ தன்ஸீஹி இப்னி அரபி : இப்னு மைமூன் மறைவு 917.

8. தன்ஸீஹுஸ் ஸித்தீகி அன் ஸிபாத்திஸ் ஸின்தீகி : இப்னு மைமூன்.

9. தஸ்∴பீஹுல் கபிய்யி ∴பீ தன்ஸீஹி இப்னி அரபி : அல் ஹலபி மறைவு 956.

10. அல் கௌலுல் முபீன் ∴பிர்ரத்தி அன் முஹ்யித்தீன் : அஷ் ஷ∴ரூனி மறைவு 973

11. ∴பர்ரல் அவ்னு மிம் முத்தயீ ஈமானி பிர்அவ்ன் : அலிய்யுல் காரி மறைவு 1014.

12. அர்ரத்து அலா இப்னி அரபி ∴பீ கிதாபிஹில் புஸூஸி



வஅலல் காயிலீன பில் ஹுலூலி வல் இத்திஹாதி : அலிய்யுல் காரி.

13. அர்ரத்துல் மதீன் அலா முன்தகிஸி அஷ்ஷெய்கி முஹ்யித்தீன் : அந்நாபில்ஸி மறைவு 1143.

14. ஷரஹ் ஜவாஹிருன் நுஸூஸி ∴பீ ஹல்லி கலிமாதில் ∴புஸூஸி : அந்நாபில்ஸி.

15. அல் இங்திபாது பி முஆலஜதி இப்னில் கையாத்தி : அஷ் ஷிராஸி.

16. அஸ்ஸுயூ∴புல் ஹத்தாதி ∴பீ அ∴னுகி அஹ்லிஸ் ஸந்தகதி வல் இல்ஹாதி : முஸ்தபா பக்ரி.

17. அர்ரத்து அலா மன் அன்கர அலா இப்னி அரபி : அல் குராப்.

18. கஷ்புல் கிதா அன் அஸ்ராரி முஹ்யித்தீன் : அல் மக்ஸூமி

ஆகிய நூல்கள் ஷெய்குல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் எழுதப்பட்ட நூல்களாகும். இதில் பெரும்பான்மையானவை கையெழுத்துப் பிரதிகளே யன்றி அச்சாகி பிரசுரமானவைகள் அல்ல.

ஷெய்குல் அக்பர் அவர்கள் பல நூற்றுக்கணக்கான நூல்களை தொகுத்தவர்களாகும். அதேநேரம் தப்ஸீர் இப்னு அரபி என்னும் நூல் அவர்களால் எழுதப்பட்டதல்ல. மாறாக அப்துர்ரஹ்மான் காஷானி என்னும் பெயருடைய ஒரு ஷியா வால் எழுதப்பட்டதாகும். இவர் ஷெய்குல் அக்பரின் புஸூசுல் ஹிகமுக்கு பார்ஸி மொழியில் விரிவுரை செய்தவராகும் என, **'அஷ்ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் பின் அரபி'** என்னும் நூலாசிரியரான மஹ்மூத் குராப் என்பார் குறிப்பிடுகிறார். இவ்வாறே வரலாற்றாசிரியர் ஹாஜி கலீபா அவர்களும் **'கஷ்புழ் ழுனூனி அன் அசாமில் குதுபி வல் புனூனி'** என்னும் நூலிலும் இப்படித்தான் குறிப்பிட்டிருப்பதாக அஷ்ஷெய்கு யூசுப் கத்தார் அவர்களும் தமது மௌஸூஆவில் கூறுகின்றனர்.

**'அத்தன்பியதுத் தரபி பீ தன்ஸியதி இப்னி அரபி'** என்னும் நூல் ஹிஜ்ரி 1346லும் 'குஸூஸுல் கலிம் பீ ஹல்லி

புஸூஸுல் ஹிகம்' என்னும் நூல் ஹிஜ்ரி 1338லும் அஷ்ரப் அலி தானவியால் எழுதப்பட்டு அவரது சொந்த ஊரிலுள்ள பிரபலமான அச்சகம் ஒன்றில் அச்சிடப்பட்டதாகும். இதில் அல்லாமா ஷ.்.ருனி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் 'யவாக்கீத்' என்னும் நூலிலிருந்து மேற்கோளுக்குரிய கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளார். இது இறுதியாக ஹிஜ்ரி 1420 முஹர்ரம் மாதம் தலைப்பிறை அன்று லாஹூரில் தஸவ்வுப் பௌண்டேஷன் என்னும் அமைப்பின் மூலமாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த நூலில் எனது ஷெய்குமார்கள் ஷெய்குல் அக்பரை மதிப்பதோடு அவரது கருத்துக்களை இதயங்களில் சுமந்தவர்களாகவும் இருந்தனர் எனக் கூறுகிறார்'' மேலும் புஸூஸுல் ஹிகம் என்னும் நூலானது பூமான் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் நூலாகும் என்றும் தானவி அவர்கள் அந்நூலின் 6ம் பக்கத்தில் குறிப்பிடுகிறார். ஆதலால் ஷெய்குல் அக்பர் அவர்கள் குப்ரிய்யத்தான கருத்துக்களை சொல்லவில்லை என்பதை நாம் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

பின்னும் ஹாபிழ் தஹபி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம், புஸூஸுல் ஹிகம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்களனைத்தும் நிச்சயமாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அனுமதியைக் கொண்டேயன்றி சொல்லவில்லை என்பதாக ஷெய்குல் அக்பர் அவர்கள் கூறியுள்ளது பற்றிய தங்களின் கருத்தென்ன? எனக் கேட்கப்பட்ட போது, அதற்கவர்கள்; இவரைப் போன்ற பெருமக்கள் பொய் பேசுபவரென்று நான் நினைக்கவில்லை என்று கூறினர். ஆதாரம் : யவாகீத்.

கஷ்ப் என்னும் தொலை நோக்குப் பார்வையுடைய நன்மக்களின் எண்ணிலடங்கா நூல்களை நான் படித்திருக்கிறேன். அவைகளில் ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபியுடைய நூலுக்கு ஒப்பாக எந்த நூலையும் நான் கண்டதில்லை. அதனாலேயே அவரது கருத்துக்களை கொண்டே இந்த நூலை நான் தொகுத்திருக்கிறேன். இருப்பினும் புதூஹாத்துல் மக்கிய்யா என்னும் நூலிலுள்ள பல விஷயங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படி இருந்தும் அக்கருத்துக்களை குறித்து இஸ்லாமிய அறிஞர்கள் என்ன கூறுவார்கள் என்பதை தெரிந்து கொள்வதற்காகவே நான் குறிப்பிட்டுள்ளதால் அக்கருத்துக்களை நானும் ஏற்றுக் கொண்டிருப்பதாக



யாரும் நினைக்க வேண்டாம். இப்படி முத்தகல்லிமீன்களான அறிஞர்களின் ஒருங்கிணைந்த கருத்துக்கு மாறு செய்வதை விட்டும் இறைவனிடம் பாதுகாப்புத் தேடுவது அல்லாமா ஷ.்.ருனி ரஹிமஹுல்லாஹ் அவர்களாகும். - யவாகீத்.

மேலும் ஷரீஅத்தில் பேசப்படாத கருத்துக்களை அவர் சொல்லவில்லை என்பதற்கு இந்த நன்மக்களே சாட்சியாகும். இதற்குப் பிறகும் நாம் ஷெய்குல் அக்பர் அவர்களை புறக்கணிப்போமாயின் மேற்கண்ட நன்மக்களையும் நாம் ஒதுக்க வேண்டி வரும். ஆனால் வஹாபிகளுக்கு இது ஓர் பெரிய விஷயமேயல்ல.

இனி ஷெய்குல் அக்பர் அவர்கள் தமது நூல்களில் சத்திய மார்க்கமாகிய இஸ்லாமிய ஷரீஅத்தின் கோட்பாடுகளுக்கு முரணான எதிர்மறை கருத்துக்களை சொல்லவில்லை என்பதற்கு அவர்களின் பிரபலமான நூலாகிய புதூஹாத்துல் மக்கிய்யா என்னும் நூல் இறைவனால் பாதுகாக்கப்பட்டதை முக்கியமான காரணங்களில் ஒன்றாக சொல்லலாம். இந்த நூல் இமாமவர்களால் எழுதப்பட்டு கோர்வை செய்யப்படாமல் க.்.பதுல்லாஹ்வின் மேல் முகட்டில் தனித்தனி காகிதங்களாக எந்தவொரு பாதுகாப்புமற்ற நிலையில் ஒரு வருடம் வரை அப்படியே இருந்தது. அந்த ஒரு வருடத்தில் மக்காவில் கடுமையான புயல் மழை போன்றவை வீசியும்கூட அக்காகிதங்களில் ஒன்றுகூட எந்தவொரு சேதத்தையும் அடையவில்லை என்பது மிக மிகக் கவனிக்கத்தக்க ஓர் விஷயமாகும். இந்த விஷயம் அல்லாமா யூசுபுன் நபஹானி அவர்களின் ஷவாஹிதுல் ஹக், மற்றும் அல்லாமா இப்னு ஹஜர் அவர்களின் பதாவா ஹதீதிய்யா, மற்றும் அல்லாமா ஷ.்.ருனி அவர்களின் யவாக்கீத்திலும் கூறப்பட்டுள்ளது.

தஸவ்வுபுடைய நூல்களான (புஸூஸுல் ஹிகம், ஈகாழுல் ஹிமம்) இன்ஸான் காமில் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஷரீஅத்திற்கு முரணானதல்ல என்றும் குர்ஆன் ஹதீதுக்கு மாறானதல்ல எனக்கூறும் பெருமக்கள் குர்ஆன் ஹதீதுக்கு மாறான, ஷரீஅத்திற்கு முரணான விஷயங்கள் வழிகேடானவை எனக் கூறுவதற்குரிய காரணமென்ன? அவ்வாறயின் அந்த நூல்களில் அப்படிப்பட்ட வழி கேட்டுக்குரிய கருத்துக்கள் ஏதேனும் இருக்கிறதா என்ன?

اذا صح الحديث فهو مذهبي.

"இதா ஸஹ்ஹல் ஹதீது ∴பஹுவ மத்ஹபீ" (ஸஹீஹான ஹதீதே எனது மத்ஹபாகும்) என்னும் இமாம்களின் வார்த்தைகளை புரிந்து கொள்ளாதவர்கள் மத்ஹபுகளை குறித்த நூல்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களில் எவை எவை ஸஹீஹான நபிமொழிக்கு உடன்பாடு உடையதாக இருக்கிறதோ அதை மட்டுமே ஆதாரமாக எடுக்க வேண்டும் என்பதாக தற்போது நமக்கு மத்தியில் பிரச்சாரம் செய்யப்படுவதை நாம் அறிவோம்) இதோர் அர்த்தமற்ற சந்தேகமாகும். அவைகளில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தும் குர்ஆன் மற்றும் ஹதீதுக்கு உடன்பட்டதாகத் தான் இருக்கிறது என்ற போதிலும் அவைகளை ஆதாரப்படுத்துவதற்குரிய விளக்கத்தை குர்ஆன் ஹதீதிலிருந்து பெறுவதற்குரிய திறமையோ ஆற்றலோ நம்மிடம் இல்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாக அல்லாமா அப்துல் கரீம் ஜியலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது 'இன்ஸான் காமில்' என்னும் நூலின் பக்கம் 5ல் கூறுகின்றனர்.

நான் குர்ஆன் ஹதீதுக்கு உடன்பாடு இல்லாத விஷயங்களை சொல்லவில்லை என இமாம் ஜியலி அவர்கள் கூறினாலும் அவற்றுக்கு முரணான கருத்துக்கள் நிறைந்திருப்பதாக அல் ஹகாயிக் என்னும் நூலின் பக்கம் 364ல் கூறும் அல்லாமா அப்துல்காதிர் ஈஸா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அத்தகைய கருத்துக்கள் அனைத்தும் இமாமவர்களால் கூறப்படாத கருத்துக்களாகும். காரணம் அவையனைத்தும் இடையில் நுழைக்கப்பட்ட இடை செருகல்களாகும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்றும் கூறுகின்றனர்.

எனவே ஷெய்குல் அக்பர் நாயகம் அவர்கள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் முரணாக பேசவுமில்லை செயல்படவும் இல்லை. ஏனெனில் ஷரீஅத்துடைய வட்டத்தை விட்டும் ஒரு நொடி நேரம்கூட தூரமானவன் அழிந்து போனான் என்பது அவர்களின் அழுத்தமான வார்த்தையாகும். (பின்னும் அல்லாஹு தஆலா உடைய விஷயத்தில்) அவர்கள் கூறியதாக நீ கற்பனை செய்யும் விஷயத்திற்கு அல்லாஹ் நேர்மாறாக இருக்கிறான். இன்னும் அவர்களுடைய நூல்களில் மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாத கருத்துக்கள் இருப்பதே அவர்களின் உயர் பதவிக்குரிய ஓர் சான்றாகும். அதேநேரம் ஷரீஅத்துடைய



வெளிப்படையான விஷயங்களுக்கும் ஜும்ஹூர்களின் கருத்துக்களுக்கும் மாற்றமாக அவரது வார்த்தைகள் இருக்குமாயின் அவைகள் அவர்களால் சொல்லப்பட்டதல்ல. மாறாக அக்கருத்துக்கள் அவர்கள் மீது இட்டுக் கட்டப்பட்டவைகளாகும். இதுதான் சுன்னத் வல் ஜமாஅத்தின் ஏகமனதான கருத்துமாகும்.

இதுபோன்றே அல்லாஹ்வுடைய விஷயத்தில் ஷெய்கவர்கள் தமது நூல்களில் கூறியிருப்பதாக சொல்லப்படும் (நீ கற்பனை செய்து கொண்டுள்ள) கருத்துக்களுக்கு அல்லாஹ் நேர்மாறாக இருக்கிறான் என்பது ஒரு விஷயம். அதேபோல அவர்களின் நூல்களில் பாமரர்களால் புரிந்துகொள்ள முடியாத கருத்துக்களும் இருக்கின்றன என்பது இன்னொரு விஷயம். இந்நிலையில் ஷரீஅத்தின் வெளிப்படையான நிலைகளுக்கு மாற்றமாக அவர்களின் வார்த்தைகள் இருக்குமாயின் அவை அவர்களால் சொல்லப்பட்டதல்ல. அத்துடன் அவர்களுடைய கருத்துக்கள் நன்மக்களின் ஒருங்கிணைந்த கருத்துக்களுக்கும் மாற்றமாக இருக்கக் கூடாது. ஒருவேளை இத்தீர்ப்புக்கு மாற்றமாக அவர்களின் கருத்துக்கள் காணப்படுமாயின் அவை அவர்களால் சொல்லப்பட்டதல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து (யாருமே சொல்லாத ஒரு கருத்தை அவர்களது நூலில் பார்க்க நேர்ந்தால்) இயன்றவரை அக்கருத்துக்களுக்கு வலிந்துரை (த∴வீல்) செய்யுங்கள் என்னும் இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கூற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கு மாறாக அல்லாஹ்வின் காரிய கர்த்தர்களாகிய வலிமார்களில் எவரையும் தவறாக எடைபோட வேண்டாம். இது தெளிந்த அறிவுடையோருக்கு ஹராமாகும் எனவும் இமாமவர்கள் கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விஷயம் இவ்வாறிருக்க சூபிய்யாக்களுக்கு காலங்காலமாக எதிர்ப்பும் பகைமையும் இருந்து வருவதால் அவர்கள் ஜனக் கூட்டத்தை விட்டும் தனிமைபட்டு விட்டனர். அந்நிலையில் அவர்களை தேடிச் செல்வோருக்கு மட்டும் தமது விளக்கங்களை கூறி வந்தனர். அக்காலத்தில் வாழ்ந்த எத்தனையோ வலிமார்கள் மீது காபிரெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஊரை விட்டும் கூட விரட்டியடிக்கப்பட்டனர். கூண்டில் அடைக்கப்பட்டு சித்திரவதையும் செய்யப்பட்டனர்.

இனி ஷெய்குல் அக்பர் அவர்கள் மிகப்பெரும் இறை நேசராகும். அவர்களின் நூல்கள் ஏற்கத்தக்கவைகளாகும் என்பது அறிஞர்களின் தீர்ப்பாகும். அதற்காக அவர்களின் கருத்துக்களை பிரச்சாரம் செய்யலாம் என்றோ எல்லோருமே அதனை விளங்கிக் கொள்வார்கள் என்றோ நினைப்பது தவறாகும். அவ்வாறாயின் அந்நூல்களை யார் யார் பார்வையிடலாம் என்பது பற்றி அறிஞர்கள் தரும் விளக்கமானது,...

மார்க்கம் என்பது உட்புறம் மற்றும் வெளிப்புறம் என்னும் இரு பகுதிகளை கொண்டதாகும். இதில் ஷரீஅத் என்பது அதனுடைய வெளிப்புறமாகும். தரீகத் என்பது அதனுடைய உட்புறமாகும். இதில் பொருள் என்பது ஒன்றாக இருந்தாலும் அதனுடைய ஒரு பகுதிக்கு இன்னொரு பகுதி மாறுபட்ட நிலையினை கொண்டதாக இருப்பதால் வெளிப்புறத்தை முழுமையாக தெரிந்து கொள்ளாதவர்களும் அதில் பாண்டித்தியம் பெறாதவர்களும் அதனுடைய இன்னொரு பகுதியான உட்புறத்தை பற்றி பேசவே கூடாது. அந்தத் தகுதியை பெற்றிருந்தவர்கள் கூட பாமரர்களுக்கு அக்கருத்துக்கள் அவசியமில்லை என்றே நினைத்தனர். காரணம் அவைகளை அவர்கள் தவறாக விளங்கிக் கொள்வதன் மூலம் அவர்களின் ஈமானுக்கு ஆபத்து வந்து சேரும் என்பதை பயந்ததால் அக்கருத்துக்களை பாமரர்களுக்கு சொல்ல விடாமல் தடுத்து வந்தனர்.

واما مطالعة كتبه رضى الله عنه فينبغي للانسان ان يعرض عنها بكل وجه امكنه فانها مشتملة على حقائق يعسر فهمها الا على العارفين المتضلعين من الكتاب والسنة المطلعين على حقائق المعارف وعوارف الحقائق فمن لم يصل الى هذه المرتبة يخشى عليه منها زلة القدم ص ٤٤١ شواهد الحق.

**"இப்னு அரபி ரழியல்லாஹு அன்ஹுவின் நூல்கள் பாமரர்களால் விளங்கிக் கொள்ள முடியாத ஞான விளக்கங்களை கொண்டதாகும். ஆதலால் அவைகளை குர்ஆன் ஹதீதை முழுமையாக புரிந்தவர்களும் அதி உயர்வான ஞான விளக்கங்களை பெற்றோருமே புரிந்து கொள்வர். அதற்கு மாறான நிலையினை கொண்டோர் அந்நூல்களை பார்வையிடுவார்களாயின் அவர்களின் கால் சருகி விடுமாதலால் அத்தகையோர் பார்வையிடுவதை முடிந்தவரை தடுக்கப்பட வேண்டும்"** இதில் ஒவ்வொருவரும் தம்மை ஒரு



ஞானியென்று வாதிக்காவிட்டாலும் அவரது ஆதரவாளர்கள் அவரை ஞானி என்றும் ஷெய்குல் அக்பரின் நூல்களை பார்வையிடும் தகுதி அவர்களுக்கு இருப்பதாகவும் சொல்லக் கூடும். இதில் தகுதி மட்டும் இருந்தால் போதாது. அதற்கு மேல் அவர்களின் நூல்களை பார்வையிடுவதற்கு சில பண்புகளும் ஒருவரில் காணப்பட வேண்டும். அப்பண்புகள் என்னென்ன என்பதை அடுத்து நமக்கு சொல்லித் தருவதை பாருங்கள்,...

ص٤٤٢ - فقد صرح الامام ابن العربي بحرمة مطالعة كتبهم الا لمن تحلى باخلاقهم وعلم معاني كلماتهم الموافقة لاصطلاحهم ولا تجد ذلك الا فيمن جد وشمر وجانب السوء وشد المئزر وتضلع من العلوم الظاهرة وتطهر من كل دني مما تعلق بالدنيا والآخرة.

**"சூபிய்யாக்களுடைய பண்புகளை கொண்டிராதவர்களும், அவர்களுடைய வார்த்தைகளுக்குரிய எதார்த்தமான விளக்கத்தை தெரிந்து கொள்ளாதவர்களும் அவர்களின் நூல்களை பார்வையிடுவது ஹராமாகும். அனைத்து வகையான தீய குணங்களை விட்டும் தூய்மையாகி உலூமுழ் ழாஹிராவில் பாண்டித்தியம் பெற்றவரிடமே இப்பண்புகள் காணப்படும் என்பதாகக் கூறுகின்றனர்"** எனவே தம்மை ஒரு ஞானியென எண்ணிக் கொண்டிருப்போர் தமக்குள் இப்படிப்பட்ட பண்புகள் உள்ளனவா என்பதை நோட்டமிட்டுப் பார்க்க வேண்டும். அத்துடன் யாருக்கு எதை கொடுக்க வேண்டும், யாரிடம் எதை சொல்ல வேண்டும் என்பதற்குரிய வித்தியாசத்தை தெரிந்திராதவர் அல்லது இழந்து போயிருப்பவர் கண்டிப்பாக ஒரு சமூகத்தை வழிநடத்தும் வழிகாட்டியாக ஒருபோதும் இருக்கவே முடியாது.

இதே கருத்தை அல்லாமா இப்னு ஹஜர் ஹைத்தமி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் தமது பதாவாவின் 297ம் பக்கத்தில் கூறுகின்றனர். ஷரீஅத்திற்குரிய சட்டங்களில் ஆழமான அறிவை பெறாதவர்கள் அந்த நூல்களை பார்ப்பதில் எந்தப் பயனுமில்லை என்றும், குதுபுஸ் ஸமானாகிய அல்லாமா இப்னு அஸ்அதுல் யாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களும் ரௌழுர் ரயாஹீன் என்னும் நூலின் 388ம் பக்கத்தில் கூறுகின்றனர். அவ்வாறாயின் அதிலுள்ள விஷயங்களை சராசரியான மனிதர்களுக்கு சொல்லவே கூடாது என்பதை இக்கூற்றுக்கள் தெளிவுபடுத்துகிறதா இல்லையா?

لا تحل قراءة كتب التوحيد الخاص وكتب العارفين الا لعالم كامل
او من سلك طريق القوم واما من لم يكن واحدا من هذين
الرجلين فلا ينبغي له مطالعة شيئ من ذلك.

**"தௌஹீதை குறித்த நூல்களையும் ஞானிகளின் கிரந்தங்களையும் காமிலான ஆலிமாக இருப்பவர் பார்க்கலாம். அல்லது சூபிய்யாக்களின் பாதையில் நடை பயில்பவர் பார்க்கலாம். இவ்விரு தரப்பை சாராதவர் அந்நூல்களை பார்க்கவே கூடாது"**
*அல்லாமா ஷ:'.ரானி - ஹகாயிக் அனித் தஸவ்வுப் 363.*

பெரும் ஞானிகள் வாயிலாக எனக்குக் கிடைத்த தகவலானது, அல்லாமா இமாம் ஸுஹ்ரவர்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தோழர்களுக்கு இப்னு அரபியுடைய கருத்துக்களுக்கு விளக்கமளித்து வந்ததாகவும் பின்னர் அவர்கள் தமது இறப்புத் தருவாயில் அந்த நூல்களை பார்க்க வேண்டாமென்றும் அவர்களுடைய கருத்துக்களை புரிந்துகொள்ள மாட்டார்கள் என்றும் கூறினர் என்பது அத்தகவலாகும். இருப்பினும் ஷெய்குல் அக்பரின் கருத்துக்களை அறிவில் ஆழமான ஞானமுடையவர்களை தவிர வேறுயாரும் பார்க்கக் கூடாது என்பதே எனது கருத்தாகும் என்பதாக இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தன்பீஹுல் கபிய்யி என்னும் நூலில் கூறுகின்றனர்.

ஷெய்குல் அக்பர் அவர்களின் நூல்களைப் பற்றி மேற்கூறப்பட்ட பெருமக்களிடம் வினவப்பட்டது போல அல்லாமா பைருஸாபாதி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடமும் கேட்கப்பட்ட சமயத்தில் தான் 'அல் இக்திபாது பி முஆலஜதி இப்னில் கையாத்தி' என்னும் நூலை அதற்குப் பதிலாக தொகுத்தார்கள்.

ஷெய்குல் அக்பருடைய நூல்கள் எல்லையில்லாத ஆழம் மிக்கதாகும். அவர்களின் நூல்களையும் அதனுடைய கருத்துக்களையும் சதாவும் சிந்திப்போர் தான் அதனுடைய முடிச்சுக்கள் அவிழ்ந்து அதைப் புரிந்திடும் வாய்ப்பை பெற்றிடுவர் எனக் குறிப்பிடுகின்றனர்.

புதூஹாத்துல் மக்கிய்யாவானது இமாமவர்களின் முக்கிய தொகுப்புக்களில் ஒன்றாகும். அது மக்கா முகர்ரமாவில் கோர்வை செய்யப்பட்டதோடு, எவருமே சொல்லாத எழுதாத அற்புதத் தகவல்களையும் கொண்டதாகும். இன்னும் அந்நூலானது அஷ்



ஷெய்கு அபுல்ஹஸன் அல் அஷ்அரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கொள்கை விளக்கத்தை ஒட்டியதே அன்றி அதற்குப் புறம்பானதல்ல. அடுத்து பெரியார் அவர்களின் மற்றுமொரு நூலான புஸூஸுல் ஹிகமானது வெளிப் பார்வைக்கு பல நிராகரிக்கத்தக்க கருத்துக்களை சுமந்ததாகவும் இருக்கிறது.

وعلى الجملة فكان رجلا عظيما والذي نفهم من كلامه حسن بسن
والذي يشكل علينا نكل علمه الى الله تعالى وما كلفنا اتباعه
ولا العمل بكل ما قاله.

**"மொத்தத்தில் அவர் மகத்துவமிக்க ஒருவராகும். அவரது கருத்துக்களில் நாம் புரிந்து கொண்டவை சிறந்ததாகும். நம்மால் புரிந்துகொள்ள முடியாததை அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டு விடுவோம். அவரைப் பின்தொடர வேண்டும் என்பதோ அவர் கூறியதை எல்லாம் அமுல்படுத்த வேண்டுமென்பதோ அவசியமில்லை"**
என ஷெய்கு தைமிய்யாவின் காலத்தை ஒட்டிய அல்லாமா இமாம் சுப்கி ரஹிமஹுல்லாஹ் என்பாரின் மாணவரும் ஹாபிழ் தஹபி, ஹாபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி போன்றோரால் புகழப்படும் அறிஞருமான கலீல் பின் அய்பக் பின் அப்தில்லாஹ் அஸ்ஸபதீ (பிறப்பு : 696, இறப்பு : 764) என்பார் அல் வா:'.பீ:'.பில் வ:'.பிய்யாத் என்னும் தமது நூலின் 14-128ல் குறிப்பிடுகிறார்.

மேலும் ஷெய்குல் அக்பரின் நூல்களில் காணப்படும் கருத்துக்களை யார் பேசுகிறாரோ அவரே ஆரிப் பில்லாஹ், காமிலான வலி எனப் பாமரர்களால் பேசப்படும் அளவுக்கு சமுதாயம் தள்ளப்பட்டுப் போய் விட்டதை எண்ணும் போது மன வேதனைதான் மிஞ்சுகிறது. அதேநேரம் அந்த நூல்களில் பேசப்பட்டுள்ள விஷயங்களுக்கு விளக்கம் சொல்பவர் உண்மையில் காமிலான வலியாக இருந்தால் சொல்ல மாட்டார் என்பது ஒரு புறமிருக்க, அவர் அதற்கு தகுதியானவர் தானா என்பதையும் நாம் உம்மை கொண்டுதான் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

இனி சூபிய்யாக்களுடைய நூல்களை ஒரு சராசரியான மனிதர் பார்க்கக் கூடாதெனில் சராசரி மனிதனுக்கு அவைகளை சொல்லக்கூடாது என்பதே அதனுடைய கருத்தாகும். அடுத்து இப்படிப்பட்ட கருத்துக்களை பொதுமக்களுக்கு சொல்லக்

கூடாதென்றும், அந்தக் கிரந்தங்களை பார்க்கக் கூடாதென்றும் நாம் கூறுவதால் அறிவை அனைவருக்கும் சொல்லாமல் தடுப்பதாக பிரச்சாரம் செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுகிறது. நாம் இவ்வாறு கூறுவதன் காரணம் என்ன என்பதை அல்லாமா அப்துல்காதிர் ஈஸா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது ஹகாயிக் என்னும் நூலின் பக்கம் 359ல் எப்படிச் சொல்கிறார் களென்று பாருங்கள்,...

**"ஒரு விஷயத்தை சிலர் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதற்காக அவ்விஷயத்தை சிலருக்கு மட்டும் மட்டுப்படுத்தி பிரச்சாரம் செய்தல்" என்றொரு தலைப்பிடப்பட்ட பாடம் புகாரி ஷரீபில் காணப்படுகிறது. இதற்கு விரிவுரையாளர் அல்லாமா ஐனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் "கிரகித்துக் கொள்ளும் தன்மை குறைவாக உள்ளோருக்கு அவ்விஷயத்தை சொல்லாமல் விட்டு விடுதல்"** என்பதாக விளக்கமளிக்கின்றனர்.

இதுபோன்றே கல்வித்துறையில் எந்தத் துறையை நாம் எடுத்துக் கொண்டாலும் அவைகளில் அனைவருக்கும் சொல்லித் தரக்கூடிய கருத்துக்கள் இருப்பது போன்று குறிப்பிட்ட சிலருக்கென்று சொல்லிக் கொடுக்க வேண்டிய விஷயங்களும் உள்ளன. இதில் தஸவ்வுபும் இந்த வகையைச் சேர்ந்ததே என அல்லாமா ஸரூக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் **'கவாயிதுத் தஸவ்வுப் பக்கம் 7ல்'** கூறுகின்றனர். ஆதலால் ஈகாழுல் ஹிமமில் அப்படிச் சொல்லப்பட்டுள்ளது இன்ஸான் காமிலில் இப்படிச் சொல்லப்பட்டுள்ளது என்பதற்காக அக்கருத்துக்கள் அனைத்தையும் அனைவருக்கும் சொல்ல முடியாது. அதைவிட்டு இதனை கவனத்தில் கொள்ளாமல் அக்கருத்துக்களை அனைவருக்கும் சொல்லிக் கொடுக்க முனைவோமாயின் முடிவில் அந்த நாதாக்கள் கூறிய விஷயம் ஒன்றாகவும், அதை குறித்த நமது விளக்கம் வேறொன்றாகவும், அதனை கேட்போர் இன்னொன்றாகவும் விளங்கி இறுதியில் வழிகேட்டில் செல்வதற்கு நாமே வழி வகுத்துக் கொடுத்த துர்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும்.

அத்துடன் தமது நூல்களை எல்லோரும் பார்க்கக் கூடாதென்பதே ஷெய்குல் அக்பர் அவர்களின் தீர்ப்புமாகும். அதே நேரம் அவர்களின் நூல்கள் ஷரீஅத்திற்கு மாற்றமானதாக இல்லையென்ற போதிலும் ஷரீஅத்தை முழுமையாக பின்பற்றிய நன்மக்கள் வாழ்ந்த காலத்திலேயே எல்லோரும் பார்க்கக் கூடா



தென எச்சரிக்கை செய்திருக்கும் போது ஷரீஅத்தை பின்பற்றுவோரென சொல்லிக் கொண்டாலும் அதனுடைய வாடையை கூட நுகராத இந்தக் காலத்தில் அந்த நூல்களை வாசிக்கவோ அல்லது பிரச்சாரம் செய்யவோ கண்டிப்பாக அனுமதிக்க முடியாது.

## ஷெய்குல் அக்பரின் கருத்துக்கள் எல்லா முஸ்லிம்களாலும் தெரிந்து கொள்ள வேண்டிய அகீதா பற்றியதா?

ஜௌஹரதுத் தௌஹீத் என்னும் அகீதாவை குறித்த விளக்கக் கவிதைகளுக்கு இப்ராஹீம் பைஜூரி என்பார் விளக்கம் எழுதியிருக்கிறார். அந்நூலின் 65ம் கவிதையின் விளக்கத்திற்கு ஷெய்குல் அக்பரின் புதூஹாத்துல் மக்கிய்யாவை ஆதாரமாகக் காட்டும் அவர் 23வது பாடலான 'உஜூத்' என்னும் வாக்கியத்திற்குரிய விளக்கத்தை சொல்லும் போது **'வஹ்தத்துல் உஜூத்'**, ஹல்லாஜ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் **'அனல் ஹக்'**, **'மா·பில் ஜுப்பத்தி இல்லல்லாஹ்'** போன்ற வாக்கியங்களை குறிப்பிட்டு இவ்வாக்கியங்கள் **'ஹுலூல் மற்றும் இத்திஹாத்'** உடைய கருத்துக்களில் சந்தேகத்தை தோற்றுவிப்பதால் இவ்வாறான வாக்கியங்களை சொல்லக் கூடாதென்றும், இவ்வாறே இமாம் அஷ்அரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் **'அல் உஜூது ஐனுல் மௌஜூதி'** எனக் கூறியதற்கும் விளக்கம் தருகிறார். இதில் அல்லாஹ் என்னும் ஒருவன் இருக்கிறான் என்பதை தெரிந்திருப்பது ஒன்றே போதுமே அல்லாமல் அவன், அன்ன உஜூதஹு தஆலா ஐனு தாத்திஹியா? அல்லது கைரு தாத்திஹி? என்பதை தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்னும் கருத்தையும் எடுத்துக் காட்டுவதை நாம் பார்க்கிறோம்.

பின்னும் இந்த இடத்தில் ஹிஜ்ரி 965ல் தோன்றிய ஒரு பெருமகனார் **'அல் கவாகிபுஸ் ஸாஹிரா பீ இஜ்திமாயில் அவ்லியாயி யகழதன் பி ஸெய்யிதித் துன்யா வல் ஆகிரத்தி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்'** என்னும் நூலின் 244ம் பக்கத்தில் கூறியுள்ள விஷயத்தை உங்களின் பார்வைக்கு தருகிறோம்,...

மக்கா முகர்ரமாவில் பாதுகாவலராக பணிபுரிந்து வந்த அல்லாமா அஸ்ஸெய்யித் அப்துல்லாஹ் அல் ஹஸனீ

ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகின்றனர். நான் ஷெய்குல் அக்பருடைய புதூஹாத்துல் மக்கிய்யாவை படித்துக் கொண்டிருந்தேன். இதனை எனது தோழர்களாக இருந்த சக உலமாக்கள் மட்டுமின்றி ஸூஹ்ஹாத் என்னும் துறவிகளும் அதைப் படிக்கக் கூடாதென தடுத்து வந்தனர். இந்நிலையில் ஒருநாள் இரவு புனித கஃபாவை தவாப் செய்தபின் மகாமே இப்ராஹீமில் தொழுது விட்டு எனக்குரிய இடத்தில் படுத்து உறங்கி விட்டேன். அதுபோது உறக்கத்தில் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஸபா என்னுமிடத்தில் நுழைவதைக் கண்டு எழுந்து நின்று நபியவர்களுக்கு ஸலாம் சொன்னேன். அதன்பின், யா ரஸூலல்லாஹ்! இப்னு அரபியுடைய கருத்துக்களை குறித்து தங்களின் அபிப்பிராயம் என்ன? என்றுகேட்க, அதற்கு நபியவர்கள்; அதை விளங்கிக் கொண்டவருக்கு அது உண்மையானது. அக்கருத்துக்கள் உஸூலுடைய ஃபுரூ(பிரி)வுகளாகும். அதனை அவருக்கு நான் எளிதாக்கி வைத்திருக்கிறேன். இது உமக்குத் தெரியாதா? என்று கேட்க, தெரியும். இருப்பினும் சிலர் அதனை மறுக்கிறார்களே எனக்கூற, அதற்கு நபியவர்கள்; **'அல் முன்கரு மஃதூருன் மின் வஜ்ஹின்'** மறுப்பவர் ஏதாவதொரு காரணத்தினால் தடங்கலுடையவர் என்று கூறினர் என்பதாகக் கூறுகிறார்.

மேலும் ஷெய்குல் அக்பர் அவர்கள் தமது நூல்களில் கூறியுள்ள கருத்துக்களை ஒவ்வொரு முஸ்லிமும் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் அவைகள் மார்க்கத்தின் மூலக் கருத்துக்களாகும். அதனை தெரிந்து கொள்ளாதவர் முழுமையான விசுவாசியாக முடியாது என்பதாக இருக்குமாயின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கனவில் கண்டு அதைப்பற்றி கேட்ட அப்பெரியாரிடம் அந்த நூல்களை எல்லோரும் கண்டிப்பாக படிக்க வேண்டுமென நான் கூறியதாக சொல்லுமென்று நபியவர்கள் ஆணையிட்டிருக்கலாம். மாறாக அக்கருத்துக்கள் உஸூலை சார்ந்தவை என்றுகூட நபியவர்கள் சொல்லவில்லை.

இன்னும் இவருக்கு முந்தைய பெரியார்கள் ஷெய்குல் அக்பரை போன்று ஏன் தெளிவாகச் சொல்லவில்லை? அத்துடன் குர்ஆன் ஹதீதில் அக்கருத்துக்கள் வெளிப்படையாகவே சொல்லப்பட்டுள்ளன எனில் அத்தகைய வசனங்களுக்குரிய விரிவான விளக்கங்களை முபஸ்ஸிரீன்களோ அல்லது முஹத்திதீன்களோ ஏன் சொல்லவில்லை? இவர்களெல்லாம் ஒரு பக்கமிருக்க ஷெய்குல் அக்பரை புகழ்ந்து பேசிய மேற்கண்ட அறிஞர்கள் இக்கருத்துக்களை பொய்யாக்குபவன் காபிரென்றோ அல்லது தெரிந்து கொள்ளாதவன் உண்மையான விசுவாசி யல்ல என்றோ சொன்னதற்குரிய ஆதாரம் ஏதுமுண்டா?



## சில தகவல்களும் இமாம்களும்

**"நிச்சயமாக அல்லாஹ் தனது தோற்றத்தில் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை படைத்தான், ஆதமுடைய மகனே! நான் நோய்வாய் பட்டிருந்தேன். நீ என்னை நோய் விசாரிக்க வரவில்லை, நான் அவன் பார்க்கும் பார்வையாக ஆகி விட்டேன்"** என்பன போன்ற வாக்கியங்களுக்கு விளக்கமளிக்கும் போது பாமரர்களுக்குத் தக்கவாறு விளக்கமளிக்க வேண்டுமென்று தான் அறிஞர்கள் கூறுகின்றனர். ஹகாயிக் அனித் தஸவ்வுப் : பக்கம்-356, 357. இதில் அல்லாமா ஷஃறானி அவர்களும் இதே கருத்தை கொண்டவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆம். பாமரர்களுக்கு மார்க்கத்தின் வெளிப்புறத்திற்குரிய, அவர்களால் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலுள்ள விளக்கங்களையே கூற வேண்டும் என்பதற்கு, ஒரு பெண்ணிடம் நபிகள் நாயகம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நீர் முஃமினா? என்றுகேட்க, ஆம் என்று பதிலளித்த அவரிடம், அல்லாஹ் எங்கே இருக்கிறான்? என்றும் கேட்கிறார்கள். அதற்கவர், ஃபிஸ்ஸமாயி (வானத்திலே) என்கிறார். பின்னர் நான் யாரென்று நபியவர்கள் கேட்க, அதற்கவர்; அல்லாஹ்வுடைய அடியாரும் அவனது ரஸூலுமாகும் என்றதும், அல்லாஹ்வின் மீதாணையாக நீர் விசுவாசி என்று கூறினர்.

அடுத்து **"நபிலான வணக்கங்கள் மூலமாக அடியான் என்னை சமீபிக்கும் போது, நான் அவன் பார்க்கும் பார்வையாகவும், அவன் கேட்கும் கேள்வியாகவும், அவன் பிடிக்கும் கரங்களாகவும், அவன் நடக்கும் கால்களாகவும் ஆகி விடுகிறேன்"** என்னும் நபி மொழியானது புகாரி ஷரீபில் பதிவாகியுள்ளது. இந்நிலையில் புகாரி ஷரீபுக்கு அல்லாமா ஐனி, அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி, அல்லாமா கஸ்தலானி, அல்லாமா இப்னு பத்தால், அல்லாமா சுயூத்தி, அல்லாமா முஹம்மத் யஹ்யா அல்

மாலிகி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் விரிவுரை செய்துள்ளவர்களாகும்.

இவர்களில் அல்லாமா இப்னு பத்தால் ஹிஜ்ரி 449ல் இவ்வுலகை நீத்தவர்களாகும். அல்லாமா யஹ்யா அவர்கள் ஹிஜ்ரி 1330ல் இவ்வுலகை விட்டு மறைந்தவர்களாகும். மற்றவர்களெல்லாம் இவ்விருவருக்கும் இடைப்பட்டவர்களாகும். இந்த நபிமொழி மஜாஸியான பொருளைக் கொண்டது என்பது தான் நம்பத்தகுந்த அறிஞர் பெருமக்களின் ஒருங்கிணைந்த தீர்ப்பாகும் என்பதாக இவர்களனைவரும் குறிப்பிட்ட போதிலும் சிலர் அடுத்து வரும் குறிப்பையும் கூறத் தவறவில்லை. அதாவது,...

**"ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் திஹ்யத்துல் கல்பி என்னும் பெயருடைய நபித்தோழரின் தோற்றத்தில் வருகை தந்ததை ஆதாரமாக்கி அடியானாகவும் எல்லாமாகவும் இருப்பது அல்லாஹ் தான் என்ற பிரச்சாரம் வழிகெட்ட இத்திஹாதுடைய அக்கிரமக்காரர்களின் கொள்கையுமாகும்"** என்கின்றனர்.

எல்லாம் அவனே என்பதாக பிரச்சாரம் செய்வோர் தங்களின் கருத்துக்கு மேற்கண்ட நபிமொழியை மட்டுமின்றி ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பற்றிய கருத்தையும் எடுத்துக் காட்டுகின்றனர். அதேநேரம் நாங்கள் ஹுலூல் மற்றும் இத்திஹாதுடைய கருத்தை சொல்லவில்லை என்றும், இந்த நபிமொழியை ஆதாரமாக்கி இத்திஹாதுடைய கொள்கையை சொல்வோரைத் தான் இமாம்கள் அக்கிரமக்காரர்கள் என்று சொல்வதாகவும், இதை நாமும் வலியுறுத்துவதாகவும் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் இந்த இடத்தில் நமது கேள்வி என்னவெனில்,...

**"ஷெய்குல் அக்பர் அவர்களை விலாயத்துடைய நன்மக்களில் ஒருவர் எனப் புகழ்ந்தோரில் அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி மற்றும் அல்லாமா சுயூத்தி போன்றோரும் குறிப்பிடத் தக்கவர்களாகும். அவ்வாறு இருந்தும் எல்லாமாக இருப்பது அல்லாஹ் தான் என்னும் கருத்துக்கு இந்த நபிமொழியை ஆதாரப்படுத்தி இது வழி கெட்டவர்களான இத்திஹாதுடைய கொள்கையுடையோரின் கருத்தாகும் என குறிப்பிடத் தவறாதவர்கள் ஹுலூல் மற்றும் இத்திஹாத் என்பது இல்லாமல் எல்லாமாக இருப்பது அல்லாஹ் தான் என்பதற்கு (இக்கருத்து இஸ்லாத்தின் மூலக்கருத்து என்றிருந்தால்) இவற்றை ஆதாரமாகக்**



**கொள்ளலாம் என ஏன் குறிப்பிடவில்லை என்பதேயாகும்"** மேலும் நபிலான வணக்கங்களை இடைவிடாது தொடர்ந்து செய்துவரும் அடியானாக அல்லாஹ் மாறுகிறான் எனில் வணக்கங்களே செய்யாதவர்களின் நிலை என்ன?

"எனது இறைவனை இன்றிரவு முகத்தில் முடி முளைக்காத **கட்டான உடலை கொண்ட அழகிய வாலிபனுடைய தோற்றத்தில் கண்டேன்"** என்னும் நபிமொழியை அல்லாஹ்வுக்கு ஒரு உருவமுண்டு என்பதற்கும் அவனை ஏதாவதொரு தோற்றத்தில் காண முடியும் என்பதற்கும் ஆதாரமாகக் கையாளப்படுகிறது. இதில்,...

"அல்லாஹ்வை அழகிய தோற்றத்தில் நான் **கண்டேன்"** என்னும் பொருளைக் கொண்ட இந்த நபிமொழியானது தப்ரானி, மஜ்மவுஸ் ஸவாயித், முஸ்னத் அஹ்மத், அல் அஸ்மாவு வஸ்ஸிபாத்தி - இமாம் பைஹகி, கிதாபுத் தௌஹீத் - இப்னு குஸைமா - திர்மிதி போன்ற நூல்களில் பதிவாகியுள்ளது. இதில் இந்த நபிமொழியைப் பற்றி இன்னின்னார் இப்படி விளக்கம் சொல்கிறார்கள் என்று சொல்வதைவிட இதைப்பற்றி ஷெய்குல் அக்பர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை சொல்வது சிறப்பாக இருக்குமென்று நினைக்கிறோம்.

قال الشيخ محي الدين فى الباب الاحد والثمانين وثلاث مائة قد اضطرب عقول العلماء في معنى هذا الحديث وفي صحته فنفاه بعضهم واثبته بعضهم وتوقف في معناه واوله ولا يحتاج الى تأويل فانه صلى الله عليه وآله وسلم انما رآه هذه الرؤيا في عالم الخيال الذي هو النوم.

**"இந்த ஹதீதுக்கு பொருள் கூறுவதில் அறிஞர்களின் புத்தி தடுமாறுகின்றது. சிலர் இது சரியான ஹதீத் என்கின்றனர். வேறு சிலர் இது சரியான ஹதீதல்ல என்கின்றனர். இன்னும் சிலர் இந்த ஹதீதுக்கு வலிந்துரை (தஃவீல்) செய்கின்றனர். மேலும் சிலர் இதற்குப் பொருள் கூறவும் தயங்குகின்றனர். ஆனால் இதற்கு வலிந்துரையே தேவையில்லை. (நேரடிப் பொருளையே கூறலாம்) ஏனெனில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்ட அக்காட்சியானது கனவில் நிகழ்ந்ததாகும் என அல்லாமா இமாம் ஷஃரானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது யவாக்கீத்தில் கூறுகின்றனர்"**

அடுத்து அல்லாஹ்வை ஏதாவதொரு உருவத்தில் காண முடியுமென்று பிரச்சாரம் செய்யும் உலமாக்கள் இந்த ஹதீதுக்கு எவ்வித வலிந்துரையும் செய்யாமல் நேரடிப் பொருளை சொல்ல லாமென ஷெய்குல் அக்பர் அவர்கள் கூறுவதாகச் சொல்வது தவறாகும். ஒருக்கால் அப்படியொரு பொருள் இந்த ஹதீதுக்கு இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட எதற்காக நேரடிப் பொருளை சொல்ல வேண்டும் என்பதற்குரிய காரணத்தை மறைப்பது ஏன்?

இதில் முன்னாலுள்ள வாக்கியத்தை விட்டு விட்டு பின்னா லுள்ள வாக்கியத்திற்கு அல்லது பின்னாலுள்ள வாக்கியத்தை விட்டு விட்டு முன்னாலுள்ள வாக்கியத்திற்கு பொருள் தருதல் என்பது வஹ்ஹாபிகளுக்கு மட்டுமே உரிய ஓர் பண்பல்ல. மாறாக மேற்கண்ட உலமாக்களுமாகும் என்றால் மிகையாகாது. காரணம் யவாக்கீத்தில் கூறப்பட்டுள்ள முத்தகல்லிமீன்களான உலமாக்களது கருத்துக்கள் அனைத்தையும் இவர்கள் மறைத்து விடுகின்றனர்.

## அல்லாஹு தஆலாவின் திருச் சந்திப்பு

இந்தத் தலைப்பில் அல்லாஹு தஆலாவை பார்க்க முடியுமா? முடியாதா? என்பதைப் பற்றிய சில கருத்துக்களை உங்களின் பார்வைக்கு தருகிறோம். அத்துடன் இதைக் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தும் கருத்துக்களுக்குமுரிய தீர்ப்புக்களும் தரப்படு கின்றன. பொதுவாக அல்லாஹு தஆலாவை பார்க்க முடியும் என்னும் விஷயத்தில் தற்காலத்தில் கருத்து மோதல் ஏதும் இல்லையென்று தான் சொல்ல வேண்டும். இதைப்பற்றி இப்னு தைமிய்யா தமது தப்ஸீருல் கபீர் என்னும் நூலில் கூறியுள்ள கருத்தொன்றை இங்கே தருகிறோம்.

**"ஸஹாபாக்கள், தாபியீன்கள், மார்க்கத்தின் இமாம்களெனப் போற்றப்படும் இஸ்லாமிய அறிஞர்களாகிய மாலிக், தௌரி, அவ்ஸாயி, லைஸிப்னு ஸஃத், ஷாபிஈ, அஹ்மத், இஸ்ஹாக், அபூ ஹனீபா, அபூ யூசுப் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரும் அஹ்லெ சுன்னாக்களுடன் இணைந்துள்ள கலாபிய்யா, கர்ராமிய்யா, அஷ்அரிய்யா, சாலிமிய்யா போன்றோரும் அவர்களல்லாதோரும் அல்லாஹ்வை பார்க்க முடியும் என்பதற்கே இந்த வசனம் ஆதாரமாக உள்ளது என்கின்றனர்"**



இதில் அல்லாஹு தஆலாவை பார்க்க முடியும் என்பதால் அவன் நம்மைப் பார்ப்பதைப் போன்று, நாமும் அவனை பார்க்கலாமென எண்ணி விடாதீர்கள். அவ்வாறு தனது இரட்சகனை பார்த்ததாகக் கூறுபவரையே பொய்யன் என்பதாக அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார் களே அன்றி ரப்பைக் கண்டதாக சொன்னவரின் கூற்றை மறுத்துச் சொன்னதல்ல. தலைக்கு மேல் பரந்து விரிந்துள்ள பிரம்மாண்டமான வானத்தை நாம் இரவு பகலாக பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம். அதேநேரம் அதை முழுமையாகப் பார்த்த ஒருவரேனும் நம்மில் இருக்கிறார்களா? வானமென்ற கற்பனையில் சதா நாம் பார்த்துக் கொண்டிருப்பது உண்மையில் வானத்தின் உண்மையான தோற்றமில்லை என்பதும் நாம் தெரிந் துள்ள ஒன்றுதான். இதுபோன்றே வல்லோனாகிய அல்லாஹ்வை இரு உலகிலும் நம்மால் பார்க்க முடியுமா? இவ்வாறே எப்போது எப்படிப் பார்க்க முடியும் என்பது குறித்த விஷயங்களை அடுத்து பார்ப்போம்.

**"அல்லாஹ்வை அஞ்சுங்கள். அவனை சந்திக்க வேண்டும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக நாம் அல்லாஹ்வை சந்திப்போம் *2-223, 249.*, அவர்களது இதயங் களில் தன்னை சந்திக்கும் வரை நயவஞ்சகத்தை போட்டு விட்டான் *10-77.*, யார் தன்னுடைய ரப்பை சந்திக்கலாமென ஆதரவு வைக்கிறானோ *16-110.*, அவனை (அல்லாஹ்வை) அவர்கள் சந்திக்கும் நாளில் ஸலாமுன் என்பதே அவர்களுக்குக் கிடைக்கும் சன்மானமாகும் *22-44*"** ஆகிய திருமறை வாக்கியங்கள் நாளை இறுதிநாளில் அல்லாஹ்வை சந்திக்க முடியும் என்பதை நமக்குச் சொல்லிக் காட்டுகின்றன. அவ்வாறு அவனை சந்திப்போர்,...

"அந்நாளில் சில முகங்கள் (மகிழ்ச்சியால்) செழுமையாக இருப்பதோடு தம்முடைய ரப்பை நோக்கியவைகளாக இருக்கும்" அல் கியாமா.

"அந்நாளில் அவர்கள் (காபிர்கள்) தமது ரப்பை விட்டும் திரையிடப்பட்டவர்களாக இருப்பர்" அல் முதப்பிபீன்.

"நன்மை செய்தோருக்கு நன்மையும் அதைவிட அதிகமும் கிடைக்கும்" யூனுஸ்.

"அல்லாஹ்வுடைய ரஸூலே! நாங்களெல்லாம் இறுதி

**நாளன்று அல்லாஹ்வை பார்ப்போமா என தோழர்கள் கேட்க, நபியவர்கள்; நிச்சயமாக காண்பீர்கள் என்றனர்''**

சுனன் அபீதாவூத், சுனன் இப்னுமாஜா.

''**நிச்சயமாக விசுவாசிகள் மஹ்ஷரிலும் சுவர்க்கத்திலும் அல்லாஹ்வை காண்பார்கள்**'' என்னும் ஆதாரங்கள் நாளை இறுதிநாளில் அல்லாஹுதஆலாவை விசுவாசிகள் பார்ப்பார்கள் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அப்படியானால் இவ்வுலகில்,...

''**நிச்சயமாக உங்களில் எவரும் மரணமடையாத வரை உங்களுடைய ரப்பை காண முடியா**''தென முஸ்லிம் ஷரீபில் பதிவாகியுள்ள நபிமொழி கூறிக் கொண்டிருந்தாலும் ''**கனவுகளில் சிறந்தது அடியான் தனது ரப்பை காண்பதேயாகும்**'' ''**யார் தனது ரப்பை கனவில் காணுகிறாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார்**'' என்றும், இதுபோன்றே ஹழ்ரத் ஸெய்யிதுனா அபூ ஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது ரப்பை கனவில் கண்டதாகவும், அல்லாமா ஆலூஸி அவர்கள் மூன்றுமுறை ரப்பை கனவில் கண்டதாகவும் சொல்லப்படும் கூற்றுக்களின் அடிப்படையில் இப்பூமியில் வாழுவோர் விழிப்புடைய நிலையில் தான் ரப்பை காண முடியாதே அன்றி கனவில் காணலாம் என்பது தெளிவாகி விட்டது. இவ்வாறே ஒரு விசுவாசி தனது ரப்பை கனவில் அவரவர் தகுதிக்கேற்ப பல்வேறு தோற்றங்களில் காண முடியும் என்பதாக இப்னு தைமிய்யாவும் தனது பதாவா3-390ல் கூறுகிறார். அதேநேரம் பார்க்கப்படும் தோற்றங்கள் அவனது தாத்துக்குரிய தோற்றம் தான் என்பதாக எவ்வாறு சொல்லக் கூடாதோ அவ்வாறே அதற்குப் புறம்பானது என்றும் சொல்லக்கூடாது.

இனி இப்பூமியில் வாழும் ஒருவர் விழிப்புடைய சுய நினைவில் அல்லாஹுதஆலாவை பார்க்கவே முடியாதெனில் ஹழ்ரத் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹ்வை தனக்குக் காட்டுமாறு எப்படிக் கேட்டார்கள்?

சகோதரர்களே! இந்த அகிலமும் இதிலுள்ள அனைத்தும் சந்தேகமின்றி அல்லாஹுதஆலாவின் உள்ளமையிலிருந்து தோற்றம் பெற்றவைகளேயாகும். அப்படி இருந்தும் அவனை குறித்து சொல்வதற்காக அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்



தான் நபிமார்களும் ரஸூல்மார்களுமாகும். அவர்களில் ஹழ்ரத் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை தவிர வேறு யாருடனும் அல்லாஹ் திரையின்றி பேசியதேயில்லை. இதுபற்றிய ஆதாரத்தை நாம் முன்னாலேயே குறிப்பிட்டு விட்டோம்.

ஹழ்ரத் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹ்வோடு திரையின்றி பேசியபோது தன்னோடு பேசிக் கொண்டிருப்பவனை திரையின்றி பார்க்க வேண்டுமென்ற ஆசையால் அவனை தனக்குக் காண்பிக்குமாறு வேண்டுகின்றனர். தனது நியதிக்கு மாற்றம் செய்ய விரும்பாத அவன் மூஸா நபியவர்களிடம் தன்னை திரையின்றி பார்க்க முடியாதென்று கூறியதோடு மலையைப் பார்க்குமாறு சொல்ல, அம்மலையில் அவனது வெளிப்பாட்டை கண்டு உணர்வற்று மயங்கி கீழே விழுந்து விட்டனர். அதுபோது அவர்கள் அவனை கண்டு கொண்டார்களென்றே ஷெய்குல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்.

அதன்பின் அக்காட்சியை விட்டும் மீண்டு தெளிவடைந்த நபியவர்கள் இவ்வுலகிலுள்ள எவராக இருந்தாலும் அவர் இறக்குமுன் இறைவனைக் காண முடியாதெனக் கூறிவிட்டு, பின்னர் தான் அவ்வாறு இறைவனிடம் கேட்டதற்காக அவனிடம் மன்னிப்பும் கோரினர். அத்துடன் இறுதிநாள் வரை அவனுடைய சிருஷ்டிகளில் யாருமே அவனை பார்க்க முடியாதென விசுவாசம் கொண்டோரில் நானே முதன்மையானவன் என்றும் கூறினர். மேலும் அவனது தஜல்லியை காண்பதென்பது ஒரு பாராதூரமான விஷயமாகும். அதேநேரம் அப்பாதையில் செல்லும் ஒருவனுடைய மனநிலை அச்சம், பீதி மற்றும் தயக்கம் நிறைந்ததாகவே இருக்குமாதலால் அது போன்றதொரு மனநிலையில் தான் நமது வணக்கங்களும் அமைந்திருக்க வேண்டும். ஆக இந்த விளக்கமும் அல்லாஹுதஆலாவை இறுதிநாளில் விசுவாசிகள் பார்க்க முடியும் என்பதையும், இப்பூமியில் விழிப்புடைய சுய நினைவில் பார்க்க முடியாதென்பதையும் தெளிவுபடுத்துகிறதே அன்றி அவனைப் பார்க்கவே முடியாது என்பதல்ல.

அவ்வாறாயின் அல்லாஹ்வை பார்க்குமுன் நான் எந்தவொரு பொருளையும் பார்க்கவில்லையென ஹழ்ரத் ஸெய்யிதுனா சித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதன் அர்த்தமென்ன என்பதாக யோசிக்கிறீர்கள் தானே! சித்தீகுல்

அக்பர் அவர்கள் ஒரு நடமாடும் மைய்யித் என்பதாக நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே கூறியிருப்பதால் அவர்களும் விழிப்புடைய நிலையில் இறைவனை பார்த்ததாகச் சொல்ல முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

"மா ரஅய்த்து ஷெய்அன் இல்லா ரஅய்த்துல்லாஹ ஃபீஹி" எந்தவொரு பொருளிலும் அல்லாஹ்வை காணாமல் அப்பொருளை கண்டதில்லை என நாதாக்களால் சொல்லப்படுவதைக் குறித்து ஒருவர் அல்லாமா அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் தப்பாக் ரஹிமஹுல்லாஹ் என்பாரிடம் கேட்டபோது, அதற்கவர்கள்; அதைப்பற்றிய வெளிப்படையான விளக்கத்தை கூறியதோடு எழுத்தால் வடிக்க முடியாத, வார்த்தைகளால் விபரிக்க முடியாத விளக்கங்கள் இதைப்பற்றிய விஷயத்தில் இருப்பதாகவும், பூர்வீகமான அல்லாஹ்வாகிறவன் நவீனமான படைப்புக்களுக்கு முற்றிலும் மாறுபட்டவனாகும் என்றும், அத்துடன் வெவ்வேறு பட்ட இரு பொருட்கள் ஒன்றாக முடியாதென்றும் தமது அல் இப்ரீஸ் என்னும் நூலில் கூறுகின்றனர்.

இந்த இடத்தில் ஹழ்ரத் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அசாத்தியமான ஒன்றை கேட்டுவிட்டு அதன்பின் அதற்காக மன்னிப்புக் கோரியதை குறித்து தவறாக ஏதும் கற்பனை செய்துவிட வேண்டாம். பாருங்கள்! அண்ணலெங் கோமான் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மக்கத்துக் காபிர்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைத்தபோது அவர்களில் பலபேர் அதனை மறுத்து விட்டனர். இந்நிலையில் உலகில் வாழும்போதே விசுவாசிக்காத அவர்கள் இறந்து போனபின் விசுவாசம் கொள்வார்களா என உம்மிடம் நாம் கேட்போமாயின் அதற்கு உமது பதில் என்னவாக இருக்கும் என்பதை நாம் சொல்லித்தான் நீர் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. நமக்கெல்லாம் தெரிந்துள்ள இவ்விஷயம் நம்மை கரை சேர்க்கும் காமில் நபியாகிய அகிலத்தின் இரட்சகராகிய அல்லாஹ்வின் ஹபீபுக்கு தெரியாமலா போய் விட்டது! இது அம்மக்களின் மீது நபியவர்கள் கொண்டிருந்த அன்பின் ஆதங்கத்திற்குரிய வெளிப்பாடல்லவா!

இதுபோன்றே அல்லாஹ்வுக்கு இணை வைத்தோரை அல்லாஹ்



மன்னிப்பதே இல்லை என்பது ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் தெரிந்துதான் இருந்தது. அப்படி இருந்தும் தமது சிறிய தந்தைக்காக அவர்கள் பாவ மன்னிப்புக் கோரினார்களே, இதுவும் அவர்கள் அவர்மீது கொண்டிருந்த அன்பின் ஆதங்கத்திற்குரிய வெளிப்பாடு தான். இப்படிப் பட்டதொரு ஆதங்கம் தான் ஹழ்ரத் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குள்ளிருந்தும் வெளிப்பட்டது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

இனி இப்பூமியில் யாராலும் அல்லாஹுதஆலாவை விழிப்புடைய சுய நினைவில் பார்க்க முடியாதெனில் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மட்டும் பார்த்ததாக கூறப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு என்ன பதில் என நீங்கள் கேட்கலாம். ஆம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மி∴ராஜுடைய இரவில் மட்டும் தான் அல்லாஹ்வை விழிப்புடைய சுய நினைவில் கண்டார்கள். இது அல்லாஹ்வால் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஓர் சன்மானமாகும். நபியவர்கள் தமது புனித தேகத்தோடு அப்பயணத்தை மேற்கொண்ட போதிலும் ஆலமுல் அஜ்ஸாம், ஆலமுல் அர்வாஹ் போன்ற உலகங்களை எல்லாம் கடந்து சென்ற பின்னரே அந்தநிலை அவர்களுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது என்பதை தெரிந்துள்ளோருக்கு இதோர் அசாத்தியமான விஷயமாக தெரியாது. மற்றபடி நபியவர்கள், நான் அல்லாஹ்வை கண்டேன் எனக்கூறியவை அனைத்தும் கனவின் வாயிலாகக் கண்ட காட்சிகளேயாகும். அருமை நபியவர்களே இவ்வுலகில் அல்லாஹ்வை விழிப்புடைய சுய நினைவில் பார்த்ததற்குரிய ஆதாரம் என்பது எதுவும் இல்லாதிருக்கும் போது ஹிரா மலைக் குகையில் அல்லாஹ் உறங்கிக் கொண்டிருக்க ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் கண்டதாகச் சொல்லப் படும் கூற்றை எப்படி நம்புவதென்று நமக்குத் தெரியவில்லை.

அடுத்து அல்லாஹ்வை கண்டதாகச் சொல்லப்படும் தகவல்களில் அவனுடைய தாத்தை தான் காணப்பட்டது என எண்ணிக் கொள்வதும் தவறாகும். காரணம் ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் தனது உண்மையான தோற்றத்திற்கு எந்த மாற்றமும் நேராத வகையில் ஹழ்ரத் திஹ்யத்துல் கல்பி என்னும் தோழருடைய தோற்றத்தில் வெளியான அவ்வெளிப் பாட்டை பலமுறை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லமவர்கள் பார்த்துள்ளனர். இந்நிலையில் வானவர்கள் அவர்களது முழுமையான தோற்றத்தை ஓரிரு தடவைகள் தான் பார்த்துள்ளனர் என்பதாக இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அல் மழ்னூனு பிஹி அலா கைரி அஹ்லிஹி என்னும் நூலில் கூறுகின்றனர். இதே அடிப்படையில் அமைந்த கருத்தை கொண்டது தான் அன்னை ஸெய்யிததுனா ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கூற்றுமாகும் என்பதை ஊகிக்க முடிகிறது. நாமும் நீரும் தோற்றத்தில் மாறுபட்டாலும் அவை அல்லாஹ்வுடைய தாத்துக்குரிய தோற்றங்களே என்னும் குப்பையான வாதத்திலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக.

## வஹ்தத்துல் உஜூத்

தேவ்பந்த் உலமாக்களின் சற்குருவும் சுன்னத் வல் ஜமாஅத்தினரால் மதிக்கப்படுபவருமான ஹழ்ரத் இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வஹ்தத்துல் உஜூதை தெளிவுபடுத்தும் பாண்டித்தியம் பெற்ற ஒரு ஆரிபீனாக இருந்தவர்கள். அதே நேரம் இக்கருத்துக்களை பிரச்சாரம் செய்யக் கூடாதென்றும் கூறி வந்தனர் என்பதாக மௌலவி காசிம் நானூத்வி கூறுகிறார்.

மேலும் சந்தேகத்திற்கிடமின்றி வஹ்தத்துல் உஜூதின் கருத்துக்கள் உண்மையானவை தான். இருப்பினும் இது இதயம் சார்ந்த விஷயமேயன்றி வாயால் பேசப்படும் ஒன்றல்ல. அத்துடன் இதைக் குறித்து எல்லோருமே தெரிந்திருக்க வேண்டும் என்பதும் கட்டாயமல்ல. மாறாக இதை மறைக்க வேண்டுமேயன்றி பகிரங்கப்படுத்தக் கூடாது. இது பாமரர்களால் மட்டுமின்றி சிற்றறிவுள்ள உலமாக்களின் அறிவுக்கும் அப்பாற்பட்ட விஷயமாகும் என்பதாக மேற்கண்ட பெரியார் அவர்கள் கூறியதாக மௌலவி அஷ்ரப் அலி தானவி என்பார் 'இம்தாதுல் முஷ்தாக் இலா அஷ்ரபில் அக்லாக்' என்னும் நூலின் பக்கம் 43ல் கூறுகிறார்.

ஆதலால் இப்னு அரபியுடைய வார்த்தைகளை சராசரியான மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாது. அதே நேரம் அவைகளில் ஷரீஅத்திற்கு மாற்றமான வார்த்தைகளும் எதுவுமில்லை. அவைகளிலுள்ள உண்மையான விளக்கத்தை புரிந்து



கொள்ளாதவர்கள் தான் அப்பெரியாரை குறை கூறுகின்றனரென்று சொல்வதும் மௌலவி அஷ்ரப் அலி தானவி தான். இவ்வாறே மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவி என்பார் 'அப்காத்' என்னும் நூலின் முன்னுரையிலேயே வஹ்தத்துல் உஜூதைப் பற்றி உறுதிப்படுத்தி பேசுகிறார்.

(ஜூட்டா ஹே குச் நஹீ ஹே தேராஹீ ழில்லு ஹே தேராஹீ உஜூத் ஹே மை க்யாஹூன் குச் நஹீஹே அவ்ர் ஜோ மை ஹூன் ஓ தூ ஹே அவ்ர் மை அவ்ர் தூ குத் ஷிர்க் தர் ஷிர்க்) என்பதாக மௌலவி ஸகரிய்யா சாஹிப் அவர்கள் பழாயிலுஸ் ஸதகா என்னும் நூலின் பக்கம் 407ல் வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பேசுகிறார். மேற்காணும் உர்தூ வாக்கியத்திற்குரிய அர்த்தத்தை தெரிந்தோரிடம் கேட்டுக் கொள்க.

வஹ்தத்துல் உஜூத் இஸ்லாத்தின் மூலக்கருத்து என்னும் பிரச்சாரத்திற்குரிய அடிப்படையில் காலங் காலமாக ஒதுக்கப்பட்டு வரும் இந்தியாவை சேர்ந்த இந்த உலமாக்கள் வஹ்தத்துல் உஜூதை ஆதரிப்பவர்களாக இருப்பதால் இப்போது இவர்களுடைய விஷயத்தில் முடிவு என்னவாக மாறப் போகிறது என்பதுதான் தெரியவில்லை.

இவ்வாறே எனது மதிப்புக்குரிய அருமை பாட்டனார் அவர்களும் அல் புர்ஹானுல் முஅய்யத் என்னும் நூலில் வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பேசுகின்றனர்.

அடுத்து ஹிஜ்ரி 1335 முஹர்ரம் பிறை 3ல் ஒருவரும் ஹிஜ்ரி 1336ல் வேறொரு நபரும் ஆஷிகுர் ரஸூல் அல்லாமா அஹ்மத் ரழா கான் சாஹிப் அவர்களிடம் வஹ்தத்துல் உஜூதைக் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, சிருஷ்டியும் சிருஷ்டி கர்த்தாவும் ஒன்றென்று சொல்வது வஹ்தத்துல் உஜூதல்ல. மாறாக அல்லாஹ் ஒருவனே சுயமான நித்தியத்திற்குரிய உஜூதைக் கொண்டவனாகும். அதே நேரம் சிருஷ்டிகளின் உஜூதாகிறது அதாயியா(அருள் புரியப்பட்டதா)கும். அவை அந்த நித்திய உஜூதுடையவனின் ழில்லு(நிழல்)களாகும் என அவர்களால் தரப்பட்ட பதிலானது பதாவா ரழ்விய்யா 14 : 617, 641ல் கூறப்பட்டுள்ளது.

பின்னும் பருவமடைந்த புத்தி சுவாதீனமுள்ள வஹ்தத்துல் உஜூதுடைய நம்பிக்கை கொண்ட ஒருவர் 'ஹமவோஸ்த்' -

எல்லாம் அவனே என்று சொல்வாராயின் அவர் காபிராகி விடுவாரா? என அல்லாமா ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் கேட்கப்பட்ட போது, அதற்கவர்கள்,...

இந்த வார்த்தைகள் பிரச்சாரம் செய்வதற்குரிய தகுதி வாய்ந்தவையல்ல. அதேநேரம் இப்படிப்பட்ட நம்பிக்கை உடையவர் ஹுலூல் மற்றும் இத்திஹாதுடைய கொள்கை யுடையோராக இருப்பாராயின் அவர் காபிராகி விடுவார். அதற்கு மாறாக அல்லாஹ்வுடைய ஸிபாத்துக்கள் தான் வெளிப் பட்டுள்ளதென்று சொல்வாராயின் (உதாரணமாக கண்ணாடியில் தோன்றும் காட்சியைப் போல) அவர் காபிராக மாட்டார். இப்படிப்பட்ட பொருளில் கூட சபைகளில் இவைகளை சொல்லக் கூடாது. காரணம் சொல்லும் நம்மிடம் இத்தகைய எண்ணமிருந்தாலும் அதைக் கேட்கும் பாமரர்கள் தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படுவதற்கு காரணமாக அமைந்து விடுமாதலால் பாமரர்களால் விளங்கிக் கொள்ளப்படும் விஷயங்களை மட்டுமே அவர்களிடம் சொல்லுங்கள். பின்னும் வஹ்தத்துல் உஜூத் பற்றிய கொள்கை குர்ஆன் ஹதீதில் தெளிவாக பேசப்படாத ஒன்றாகும் எனவும் அவர்களால் தரப் பட்ட பதிலானது பதாவா அஸீஸிய்யா என்னும் நூலில் பக்கம் *135ல்* கூறப்பட்டுள்ளது.

**"வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பிரச்சாரம் செய்வோரை காபிர் என்றும், அவரது பின்னால் தொழக் கூடாதென்றும், அவர்களோடு திருமண உறவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதென்றும், அவர்கள் குர்பானி செய்ததை உண்ணக் கூடாதென்றும் சொல்வது கூடாது. இது தவறாகும். காரணம் இத்தகையோரும் முஸ்லிம்களேயாகும். அதேநேரம் இப்பிரச்சாரம் மார்க்கத்தின் அடிப்படையான விஷயங்களைச் சார்ந்ததல்ல. இவ் விஷயத்தில் பாமரர்கள் ஆய்வு செய்யாதிருப்பதே அவர்களது ஈமானின் பாதுகாப்புக்கு போதுமானதாகும் என்பதாக அல்லாமா ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல் லாஹ் அவர்களின் பதாவா அஸீஸிய்யா 1-46ல் கூறுகின்றனர்"**

இவ்வாறே மௌலவி அப்துர்ரஹ்மான் லக்னவி என்பாரின் கருத்துக்களுக்கு இவர்களால் எழுதப்பட்ட மறுப்புரையை இதே பதாவாவின் பக்கம் *59* முதல் *74* வரை காணலாம்.

அடுத்து சுல்தானுல் ஃபக்ர் செய்யிதுனா பாஹூ



ரஹிமஹுல்லாஹ் அவர்கள் (பி : *1039*, ம : *1102* ஹி) கமாலிய்யத்தெனும் பூரணத்துவத்தை அடைந்த நன் மக்களாகிய சூபிகளில் ஒருவராகும். இவர்களது நூல்கள் தத்துவ முத்துக்களான ஞானக் கருத்துக்களை கொண்டவைகளாகும். ரிஸாலா ரூஹீ என்னும் பெயருடைய ஐந்து பக்கங்களை கொண்ட பாரசீக மொழியில் எழுதப்பட்ட இப்பிரசுரம் கடுகைப் போன்றதேயாயினும் இதற்கு பலபேர் விரிவுரை செய்துள்ளனர். விரிவுரை இன்றி இப்பிரசுரத்தை மட்டும் பார்வையிடும் ஒருவர் தவறான முடிவுக்கு இட்டுச் செல்லப்படுவதற்குரிய வாய்ப்புக்கள் இதில் நிறைய உண்டு. இப்பிரசுரத்தை விரிவுரை செய்தோரில் மிக முக்கியமானவரான செய்யித் அஹ்மத் சயீத் ஹமதானி என்பார், இதில் பேசப்பட்டுள்ள கருத்துக்கள் மிகவும் ஆழமானவைகளாகும் என்றும், அல்லாஹுதஆலாவின் பிரத்தியேகமான நல்லருளை பெற்றோரே இதனை சரியாகப் புரிந்து கொள்ள முடியுமென்றும், இப்பிரசுரத்திலுள்ள கருத்துக்களுக்கும் பாமரர்களுக்கும் அறவே சம்பந்தமில்லை என்றும் கூறுகிறார்.

அல்லாமா இமாம் நாபில்ஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹுலூல் மற்றும் இத்திஹாதுடைய கருத்துக்களை நிராகரிப் பதோடு வஹ்தத்துல் உஜூதையும் மறுக்கின்றனர். இவர்கள் ஹிஜ்ரி *1050* துல்ஹஜ் மாதம் பிறை 5ல் பிறந்து ரமழான் பிறை *15* ஹிஜ்ரி *1143ல்* இறையடி சேர்ந்தவர்களாகும். இவர்கள் ஐநூறுக்கும் மேற்பட்ட நூல்களை தொகுத்துள்ளனர். இவர்கள் கூறுவதாவது,...

ولا تقل انت هو ما انت هو ابدا
لا شيئ كيف يساوي الشيئ واعجبا
لا تقل وحدة الوجود اذا لم
تفن عن كل كائن موجود
واجتنب وحدة الوجود ودعها
لرجال قاموا بحفظ العهود.

**"இன்னும் நீ உன்னை அவன் என்று சொல்லாதே. நிச்சயமாக நீ அவனில்லை. காரணம் ஷெய்ஆக இல்லாத ஒன்று ஷெய்ஆக இருப்போனுக்கு எப்படி சமமாக முடியும்? இந்நிலையில் நீயும் அவனும் ஒன்றுதான் என்று சொல்வது ஆச்சரியமே. ஒவ்வோர் பொருளை விட்டும் நீ ஃபனாவாகாத வரை வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பேசாதே. நீ நீயாக இருக்கும் போது வஹ்தத்துல் உஜூதைப்**

பற்றி பேசுவதை விட்டும் உன்னை நீ தற்காத்துக் கொள். சத்திய வாக்குறுதிகளை பாதுகாத்து அவைகளை நடைமுறைபடுத்தும் நல்லோரிடம் அதனை ஒப்படைத்து விடு" எனக் கூறுவதோடு அடுத்து அவர்கள் கூறுவதையும் பாருங்கள்,...

வஹ்தத்துல் உஜூத் என்பது காலங்காலமாக பேசப்பட்டு வரும் ஒரு விஷயமாகும். திரையிடப்பட்ட பொடுபோக்குடைய திறமையற்ற சமூகத்தார் அதனை எதிர்த்தாலும் திறமையுள்ள பாண்டித்தியம் பெற்ற ஞானிகள் அதனை ஏற்றுக் கொள்கின்றனர். வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பேசியவர்கள் அதை எந்த அர்த்தத்தில் பேசினார்களோ அதைப் புரிந்து கொள்ளும் விவேகம் இல்லாததாலேயே அதை தவறாகப் புரிந்து கொண்டு பேசியவர்களை எதிர்க்கின்றனர். அதேநேரம் எதிர்ப்போர் அதனை சரியாகப் புரிந்து கொள்வார்களாயின் எதிர்ப்பென்னும் வார்த்தையே அர்த்தமற்றுப் போய்விடும் என்பதாகக் கூறுவோர் ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி, அஷ்ஷெய்கு ஷரபுத்தீன் பின் அல்பாரிழ், அபீபுத் தில்மஸானி, அஷ்ஷெய்கு அப்துல் ஹக் பின் சப்யீன், அஷ்ஷெய்கு அப்துல் கரீம் அல் ஜியலீ கத்தஸல்லாஹு அஸ்றாரஹும் போன்ற அகம் தெளிந்த நன்னடத்தை கொண்ட கஷ்புடைய பார்வை பெற்ற ஞானப் பெருமக்களாகும். இன்னும் இவர்களால் சொல்லப்பட்ட விஷயங்கள் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினருக்கு மாற்றமானவைகளல்ல. மாற்றமாகவும் இருக்காது. பின்னும் இவர்களது கருத்துக்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் அற்றவர்களும் இத்துறை பற்றிய அடிப்படை அறிவில்லாதவர்களுமே மறுக்கின்றனர். ஏனெனில் அந்த ஞானிகளின் அறிவானது கஷ்போடு தொடர்புடையதாகுமாதலால் வெறுமனே உணர்வுகளின் தாக்கங்களை மட்டும் தமக்குள் கொண்டுள்ளோர் அவர்களின் நூல்களை ஆய்வு செய்து புரிந்துகொள்ள முயல்வது பாறையில் விதை விதைத்து அறுவடை செய்வதற்கு ஒப்பாகும்.

இதுபோன்றே வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பருவமடைந்த புத்தி சுவாதீனமுள்ள ஒவ்வொருவரும் தகுந்த முறையில் ஆய்வுசெய்து சரியான விதத்தில் அதனை பாதுகாப்பதும் அவர்களின் கடமையாகும். இனி அதற்கெதிராக குரல் எழுப்புவோரின் கூற்றுக்களையெல்லாம் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.



பாருங்கள்! வஹ்தத்துல் உஜூத் என்பது இஸ்லாமிய மார்க்கத்திற்கு மாற்றமான ஒன்றல்ல. மாறாக படித்தவர் முதல் பாமரர் வரை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நம்பிக் கைக்கு உடன்பாடு கொண்டதேயாகும். அதேநேரம் இதனை எல்லோரும் கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும் என்பது மில்லை. ஆனால் நல்ல சிந்தனை கொண்ட யாரும் இதை மறுக்கவும் மாட்டார்கள்.

வாருங்கள்! எந்த விதிவிலக்குமின்றி அகிலங்களில் உள்ளவை அனைத்தும் தானாகத் தோன்றியவையல்ல. அவை களுக்கென சுயமான தோற்றம் என்பதும் அறவே கிடையாது. அவைகள் இல்லாமையில் இருந்து அல்லாஹ்வுடைய உள்ளமையைக் கொண்டு உள்ளமையின் பக்கமாக வந்தவை யாகும். ஆதலால் அவைகளுக்குரிய உள்ளமையும் அல்லாஹ் வுடைய உள்ளமையும் ஒன்றேயாகும். இவ்வாறு தமக்குள் ஒரு சுயத் தோற்றமற்ற சிருஷ்டிகள் அல்லாஹ்வுடைய உஜூதைக் கொண்டு தமக்குரிய உஜூதைப் பெற்றதால் அவைகளும் அல்லாஹ்வாகத் தான் இருக்கின்றன என்பது பொருளல்ல. மாறாக அவையனைத்தும் பார்வைக்கு புலப்படும் பொருட்களாக தோற்றம் பெற்றதெல்லாம் அல்லாஹ்வின் உள்ளமையைக் கொண்டேயன்றி வேறில்லை. அதனால் அல்லாஹ்வுடைய உள்ளமையில் ஒரு மாற்றமோ அல்லது கூடுதலோ குறைவோ ஏற்பட்டு விட்டதாக கனவில் கூட கற்பனை செய்துவிடக் கூடாது. பாருங்கள்! விண்ணிலே பிரகாசிக்கும் சூரியன் பூமியை விடப் மிகப் பெரியது. ஆனால் நமது பார்வைக்கு அது சிறிதாகத் தெரிகிறது என்பதற்காக அது தனது உண்மையான தோற்றத் திலிருந்து மாற்றமடைந்து விட்டதென்று சொல்ல முடியும்!

இன்னும் வஹ்தத்துல் உஜூதுடைய கருத்தை பேசுவோரெனக் கூறிக்கொள்வோர் அடியானுடைய மப்ரூழான முகத்தரான (சுயமற்ற) தோற்றத்தை அல்லாஹ்வுடைய தோற்ற மென்றும், அவர்களின் ஸிபாத்துக்களை அல்லாஹ்வுடைய ஸிபாத்துக்களென்றும் பிரச்சாரம் செய்வது இல்ஹாதும் சிந்திக்கு களின் கொள்கையுமாகும்.இவ்வாறு வஹ்தத்துல் உஜூதுக்கு விளக்கம் தரப்படுமாயின் அதை எதிர்ப்பது அறிஞர்களின் கடமையாகும். இப்படிப் பேசுகின்ற ஒருவர் வசிக்கும் ஊரில் வசிக்க வேண்டாமென்றும், இவர்களோடு சகவாசம் வைத்துக் கொள்ள வேண்டாமென்றும் இமாமவர்கள் உபதேசிக்கின்றனர்.

எனவே உஜூத் என்பது ஒன்றுதான். அது அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உரியதாகும் என்ற வஹ்தத்துல் உஜூ துடைய கொள்கைக்குரிய விளக்கமானது இரு வகைப்படும். இதைப்பற்றி பேசுவோரும் இரு வகைப்படுவர். அதில் முதலாவது வகையினர், அல்லாஹ் படைப்புக்களோடு கலந் திருக்கிருன் என்றும், ஆதலால் இருப்பவை அனைத்தும் அல்லாஹ் தானென்றும் எல்லாமே அவன் தானென்றும் அவனே அனைத்து மென்றும் ஒவ்வொரு பொருளும் தான் தான் அல்லாஹ் என்பதை தெளிவுபடுத்துகிறதென்றும் கூறுகின்றனர். இதுதான் வஹ்தத் துல் உஜூத் என்பதற்கு ஞானிகள் சொல்லும் விளக்கமல்ல. மாருக இக்கருத்து சூபிய்யாக்களால் மறுக்கப்பட்ட நிராகரிக் கப்பட்ட பொய்யானதொரு விளக்கமாகும். அத்துடன் இக் கொள்கை சில வணக்கக்காரர்களின் கொள்கையை விட மிக மோசமான பாத்திலான விளக்கமாகும்.

இரண்டாவது சூபிய்யாக்கள் சொல்லும் உண்மையான வஹ்தத்துல் உஜூதுக்குரிய விளக்கமானது, பூர்வீகமான அல்லாஹ்வின் உள்ளமை பற்றியதாகும். இது நிரந்தரமற்ற ஹாதிஸாகிய புதிதான தோற்றத்தை கொண்டுள்ள அகிலங் களான சிருஷ்டிகளைப் போன்றதல்ல. நிச்சயமாக அல்லாஹ்வின் உள்ளமையானது பலது என்பதின்றி ஒன்றேயாகும். அதேநேரம் அகிலங்களாக பார்வைக்கு தோற்றமளிப்பவை ஒரு சுயமற்ற தோற்றம் என்பதோடு அழிந்தும் போகக் கூடியதாகுமாதலால் அவைகளுக்கென தனியானதொரு உள்ளமை என்பது எதுவு மில்லையெனக் கூறப்படுவதை தவருகப் புரிந்துகொண்டதன் விளைவு! அகிலங்களின் தோற்றமும் அல்லாஹ்வின் தோற்றமே யாகும் எனக் கருதிக் கொண்டதேயாகும் என்பதாக அல்லாமா அப்துல் காதிர் ஈஸா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'ஹகாயிக் அனித் தஸவ்வுப்' என்னும் நூலில் கூறுகின்றனர். எனவே நாங்கள் ஹுலூல் மற்றும் இத்திஹாதுடைய கொள்கையை கடுமையாக எதிர்ப்பவர்களெனக் கூறிக்கொண்டே ஹாதி ஸாகிய நவீனமான தோற்றத்தை கொண்டுள்ள சிருஷ்டி களனைத்தும் எதார்த்தத்தில் அல்லாஹ்வாகவே இருக்கின்றன எனப் பிரச்சாரம் செய்யப்படுவதைக் கண்டு ஏமாந்து உங்களின் ஈமானை பறிகொடுத்து விட வேண்டாமென பணிவோடு வேண்டிக் கொள்கிருேம்.

அல்லாஹ்வின் நல்லடியார்களாகிய அருமை தோழர்களே!



வஹ்தத்துல் உஜூத் என்னும் பிரச்சாரம் ஞானவான்களாகிய நன்மக்களால் சொல்லப்பட்ட விளக்கமா? அல்லது முல்ஹிதீன் களாகிய சிந்திக்குகளால் சொல்லப்பட்ட விளக்கமா என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். ஞானவான்களால் சொல்லப்பட்ட வஹ்தத்துல் உஜூதுக்குரிய விளக்கமானது இஸ்லாத்தின் எதார்த்தத்தை உள்ளடக்கும் விளக்கமாக அமைந்திருந்தது. அதற்காக எல்லாமே அல்லாஹு தஆலாவின் தாத்து தான் என்பது அதனுடைய பொருளல்ல. இவ்வாறே ஞானவான்கள் சொன்ன வஹ்தத்துல் உஜூதில் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்னும் மூல மந்திரத்தை மொழிபவர் அதனை அவசியம் தெரிந்திருக்க வேண்டும். வணக்கத்திற்குத் தகுதி யானவன் அவனையன்றி வேறு யாருமில்லையென அவ்வாக்கியத் திற்கு பொருள் தருதல் துரோகத்திற்குரிய செயலாகும் என்பது போன்ற பிரச்சாரம் இஸ்லாமிய முன்னோடிகளால் சொல்லப் படாத ஒன்றென்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட சந்தேகங்கள் நிறைந்த ஒரு விஷயமாக இந்த வஹ்தத்துல் உஜூத் என்பது இருப்பதால் தான் இத்தகைய கருத்துக்களை கொண்டுள்ள நூல்களை பார்க்க வேண்டாமென் றும், பிரச்சாரம் செய்யக் கூடாதென்றும் அறிஞர்கள் தடுத்து வந்தனர். அல்லாமா ஸைனீ தஹ்லான் ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகின்றனர். அஷ்ஷெய்கு அர்ரம்லி ரஹிமஹுல் லாஹ் அவர்களிடம் வஹ்தத்துல் உஜூதைப் பற்றி பேசுவோரை குறித்து கேட்கப்பட்ட போது, அதற்கவர்கள்; இது வலிந்துரை (த:வீல்) செய்ய முடியாத ஒன்ருகுமாதலால் இது யூத, கிறிஸ்தவர்களின் கருத்தை விட மோசமானதொரு கருத்தாகும். இவன் ஒரு முர்தத்தாகும். இவனை கொன்று அவனது பிணத்தை நாய்களுக்கு இரையாக்க வேண்டுமென்று சொன்னர்கள். நூல் : அல் அகீதத்துல் ஹக்கா, பக்கம்-*139*.

இனி ஹுலூல் மற்றும் இத்திஹாதின்றி அல்லாஹ் இருக்கிருன் எனில் அடியானுக்கும் அல்லாஹ்வுக்குமுரிய தொடர்பென்ன? அடியானக இருப்பது அவனு? அல்லது அவனல்லாததா? அவனல்லாதது என்று சொன்னல் அடியானை ஒரு சுயமுள்ளவனகக் கொள்ள வேண்டும். இது அசாத்திய மாகும். அவ்வாறின்றி அடியான் இறைவனகத்தான் இருக்கிரு னென சொல்லப்படுமாயின் இது ஹுலூலுடைய கொள்கை யாகும். இதைப் பற்றி எங்களுக்கு விளக்கித் தாருங்களேன் என

என்னிடம் மு∴மினை ஜின்கள் கேட்டபோது, அதற்கவர்கள்; இதோர் தீராத பிரச்னையாகுமாதலால் இதனை கஷ்பை கொண்டே தீர்க்கப்படும் என்பதாக அல்லாமா ஷ∴ரானி அவர்களால் சொல்லப்பட்ட விளக்கம் 'கஷ்புல் ஹிஜாபி வர்ர∴னி அன் வஜ்ஹி அஸ்யிலத்தில் ஜான்னி' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்றே இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் நூலாகிய '**மின்ஹாஜுல் ஆபிதீன் இலா ஜன்னத்தி ரப்பில் ஆலமீன்**' என்பதற்குரிய விரிவுரையாகிய '**சிராஜுத் தாலிபீன்**' *1-143*ம் பக்கத்தில் "**வஹ்தத்துல் உஜூத்**" "**அனல் ஹக்**" "**மா பில் ஜுப்பத்தி இல்லல்லாஹ்**" என்பது போன்ற கருத்துக்கள் ஹுலூல் மற்றும் இத்திஹாதுக்குரிய சந்தேகத்தை தோற்றுவிப்பதால் இப்படிப்பட்ட வார்த்தைகளை ஷரீஅத் அனுமதிக்காதெனக் குறிப்பிட்டவர்கள் "**அல் உஜூத் ஐனுல் மௌஜூத்**" என்னும் அல்லாமா அஷ்அரியின் கூற்றுக்கு சிலர் வெளிப்படையான பொருளை சொல்கின்றனர் என்றும், அல்லாமா ச∴துத்தீன் தப்தாஸானி போன்ற தகுதி மிக்கோரே சரியான விளக்கம் சொல்கின்றனரென்றும் கூறிவிட்டு, அல்லாஹ் என்ற ஒருவன் இருக்கிறானென்று நம்பிக்கை கொள்வதே ஒரு முகல்லபுக்கு போதுமேயன்றி "**அன்ன உஜூதஹு தஆலா ஐனு தாத்திஹியா? அல்லது கைரு தாத்திஹியா?**" என்பதற்குரிய விளக்கங்களை எல்லாம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், இவைகள் இல்முல் கலாமின் ஆழிய கருத்துக்களாகும் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இனி வஹ்தத்துல் உஜூத் என்றாலே எல்லாமே அல்லாஹ் என்பதுதான் அதற்குரிய பொருள். அதாவது, ஷெய்குல் அக்பர் நாயகம், அவ்ஜதல் அஷ்யாஅ வஹுவ ஐனுஹா - அல்லாஹு தஆலாவே எல்லாமாக இருந்து கொண்டு அனைத்தையும் தோற்றுவித்தான் என்பதாக அவர்கள் கூறுவதை ஆதாரமாகக் காட்டலாம். இது அவர்களால் சொல்லப்பட்ட வார்த்தை தான் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் இது அந்த வாக்கியங்களின் மேலோட்டமான அர்த்தமாகும். மேலெழுந்த வாரியான அர்த்தங்களை மட்டும் சொன்னால் போதும் என்றிருந்தால் அவர்களின் நூல்களை பார்வையிட ஆழமான அறிவு வேண்டுமென்றும், அக்கருத்துக்களை எல்லோருக்குமே சொல்லக் கூடாதென்றும் ஏன் தடுக்க வேண்டும்?



இன்னும் மேற்கண்ட வாக்கியத்திற்கு வெளிப்படையான ஓர் அர்த்தம் இருந்தாலும் அது அவ்வாக்கியத்திற்குரிய உண்மையான அர்த்தமல்ல. இப்படிப்பட்ட அர்த்தங்கள் தவறானதோர் நிலைக்கு வழி வகுத்து விடும் என்பதால் தான் மேற்கண்டவாறு தடை விதிக்கப்பட்டது. இதில் நன்மக்களில் ஒருவரான ஹழ்ரத் சுல்தானுல் ஆஷிகீன் மஹ்பூபே இலாஹி நிழாமுத்தீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் புதூஹாத்துல் மக்கிய்யா, புஸூஸுல் ஹிகம் போன்ற நூல்களை தமது மாணவர்களுக்கு போதித்தவர்களாகும். அதுபோது மேற்கண்ட வாக்கியத்தை எடுத்துக் காட்டி சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவும் ஒன்றுதான் என்னும் அர்த்தத்தை இவ்வாக்கியம் பேசுவதாக ஒருவர் சொல்ல, அதைக் கேட்ட மஹ்பூபே இலாஹி அவர்கள் சிறிது நேரம்வரை எதுவுமே பேசாது இருந்தனர். அதன்பின் சிருஷ்டிகர்த்தா சிருஷ்டிகளாக இருக்கிறானென நான் சொல்லவில்லை என்று ஏன் பதிலளிக்காது இருக்கிறீர்? என்பதாக இப்போது இங்கே ஆஜராகிய ஷெய்குல் அக்பர் அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றதாக பதில் தந்தனர். பார்க்க : மல்பூழாத், பக்கம்-*11*.

குத்பு நாயகத்தின் வம்சத்தை சார்ந்தவர்களும் இமாமுல் முஹக்கிக் எனப் போற்றப்பட்டவர்களும் காதியானிகளின் சிரசுகளை துண்டித்தவர்களுமாகிய ஹழ்ரத் ஸெய்யிதுனா மெஹ்ர் அலி ஷாஹ் ரஹிமஹுல்லாஹ் என்பாரும் ஷெய்குல் அக்பர் அவர்களின் நூல்களுக்கு விளக்கமளித்தவர்களில் ஒருவராகும். ஒருநாள் அவர்களிடம் மேற்கண்ட வாக்கியத்திற்குரிய விளக்கம் கேட்சப்பட்ட போது அதற்கவர்கள், இவ்வாக்கியத்திற்குரிய வெளிப்படையான அர்த்தத்தை மட்டும் எடுத்துக் கொண்டவர்கள் வழி கேடர்களாகும். சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவும் ஒன்றெனச் சொன்னதாக எண்ணிக் கொண்டதால் தான் சிலர் ஷெய்குல் அக்பரை நிராகரிக்கவும் செய்தனர். இதில் '**ஐன்**' என்னும் வாக்கியத்திற்கு அது நான்தான் நான்தான் அது என்றொரு அர்த்தம் இருப்பது போல மற்றொரு பொருளின் உதவியைக் கொண்டு நிலைநிற்கும் ஒன்றெனவும் ஒரு அர்த்தமுண்டு. இந்த இரண்டாவது அர்த்தம் தான் அவ்வாக்கியத்திற்குரிய சரியான அர்த்தமாகும் என விளக்கமளிக்கின்றனர்.

அஷ்ஷெய்கு இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் எழுதப்பட்ட 'ழியாவுல் குலூப்'

என்னும் நூல் ஒன்றில் முராகபா பற்றி பேசும்போது, அத் தருணத்தில் ஹமவோஸ்தை கருத்தில் கொள்ளுதல் அவசிய மாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர். ஹமவோஸ்த் என்னும் சொல்லானது பாரசீக மொழிச் சொல்லாகும். எல்லாமே அல்லாஹ் தான் என்பது அதனுடைய வெளிப்படையான பொருளாகும். இவ்வாறு நான் பொருள் கொண்டது சரியா? என ஒருவர் கேட்ட சமயத்தில் தான் (ரிஸாலா தர் பயானே வஹ்ததில் உஜூதி - வஹ்ததுல் உஜூதை தெளிவுபடுத்தும் பிரதி) என்னும் பெயரில் பாரசீக பிரசுரம் ஒன்றை எழுதி வெளியிட்டிருந்தார்கள். ஹமவோஸ்த் என்னும் வார்த்தையை நான் உபயோகப்படுத்தி இருப்பது உண்மை. நீர் கூறுவதைப் போல ஒரு பொருள் அதற்கு இருந்தாலும் அப்பொருளின் அர்த்தத்தில் நான் அவ்வார்த்தையை உபயோகிக்கவில்லை. அதனுடைய பொருளை உன்னைப் போன்றவர்களால் புரிந்து கொள்ளவும் முடியாதென்று அதில் அவர்கள் கூறுவது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாகும்.

ஆதலால் சூபிய்யாக்களால் எடுத்துக் காட்டப்படும் வஹ்தத்துல் உஜூதை பற்றி பாமரர்களுக்கு சொல்லக் கூடாதென்பதே நன்மக்களாகிய நாதாக்களின் தீர்ப்பாகும். அதேநேரம் எல்லாமே அல்லாஹுதஆலாவுடைய தாத்து தான் என்னும் கருத்து வழி கேட்டுக்குரிய கருத்தேயன்றி பாமரர் களுக்கு சொல்லக் கூடாதென தடை செய்யப்பட்ட வஹ்தத்துல் உஜூதுக்குரிய கருத்தல்ல என்பதை திண்ணமாக நம்புங்கள். இல்லையில்லை. ஒவ்வொரு பொருளும் அதற்குரிய மூலப் பொருளின் தோற்றம் என்பதுதான் வஹ்தத்துல் உஜூத் என்பதற்குரிய கருத்தென்று வாதிப்பார்களாயின் இன்னோர் சூபிய்யாக்களின் வழியில் சென்று பயிற்சி பெற்றிராத அரை வேக்காடுகள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

اجمع المحققون من اهل الله عز وجل على جلالته في سائر العلوم
كما تشهد بذلك كتبه وما انكر من انكر عليه الا لدقة كلامه لا غير
فانكروا على من يطالع كلامه من غير سلوك طريق الرياضة خوفا
من حصول شبهة في معتقده يموت عليها ولا يهتدي
لتأويلها على مراد الشيخ.

"அஹ்லுல்லாஹ்க்களான நாதாக்களில் பெரும்பான்மை



யோரின் கருத்தானது, ஷெய்குல் அக்பர் அவர்கள் சகல கலை களிலும் தேர்ச்சி பெற்றதோர் மேதையாகும் என்பதற்கு அவர் களின் நூல்களே அதற்கு சாட்சியாகும். அவர்களின் கருத்துக்கள் மிகவும் ஆழமான நுட்பம் நிறைந்தவைகள். சூபிய்யாக்களின் பாதையில் சென்று பயிற்சி பெருத தகுதியற்ற ஒருவர் அந்த நூல்களை பார்ப்பாராயின் ஷெய்குல் அக்பர் அவர்கள் கூறிய கருத்துக்கு முரணாக அவர் அதனை தவருகப் புரிந்துகொள்வதோடு பிழையான அகீதாவுக்குரிய நிலையில் இறந்து போவதை அஞ்சும் சிலரே அவர்களுடைய நூல்களை பார்க்கக் கூடாதெனத் தடுப்பதோடு ஷெய்குல் அக்பர் அவர்களையும் மறுக்கின்றனர்" என்பதாக அல்லாமா ஷ.':ருனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்.

நூல் : அத்தபகாத்துல் குப்ரா, பக்கம்-403., அல் ஹுலூலுஸ் ஸுந்துஸிய்யா.'.பில் அக்பாரி வல் ஆதாரில் உன்துலுஸிய்யா, பா-3, பக்கம்-393.

இதுபோன்றே சூபிய்யாக்களில் சிலரை உலமாக்கள் எதிர்ப்பதற்குக் காரணம் அவர்களுடைய கருத்துக்களை பாமரர்கள் பார்ப்பதன் மூலம் தவருக அதைப் புரிந்துகொண்டு வழிதவறிப் போய் விடுவார்கள் என்பதை அஞ்சிய காரணமேயன்றி ஒட்டு மொத்தமாக சூபிய்யாக்களை எதிர்க்க வேண்டுமென்பது அவர்களின் நோக்கமல்ல. இதில் அவர்கள் செய்தது சரிதான் என்கின்றனர் அல்லாமா யூசுபுன் நப்ஹானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். பார்க்க : ஷவாஹிதுல் ஹக், பக்கம்-425.

எனவே நம்மால் மதிக்கப்படுகிற ஒருவரோ அல்லது சுன்னத் வல் ஜமாஅத்தை தமதாகக் கொண்டுள்ள ஒருவரோ ஷெய்குல் அக்பர் அவர்களை நிராகரிக்கிருர் எனில், அல்லது அவர்களின் கருத்துக்களை பாமரர்களுக்குச் சொல்ல வேண்டாமென தடுக்கிருர் எனில் அது பாமரர்களின் நலனை கருத்தில் கொண்டேயன்றி மற்றபடி தமது சுய விருப்பத்திற்காக அல்ல என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.

அடுத்து ஷெய்குல் அக்பர் அவர்களின் காலத்தில் வாழ்ந்த இன்னெரு பெரியார் மௌலானு ஜலாலுத்தீன் ரூமி ரஹிமஹுல் லாஹ் அவர்களாகும். இவர்கள் ரபீவுல் அவ்வல் மாதம் ஆரும் நாள் 604ல் தற்போது ஆப்கானிஸ்தான் நாட்டில் பல்க் என்னும்

கிராமத்தில் தோன்றி ஜமாதில் ஆகிர் ஐந்தாம் நாள் 672ல் மறைந்தவர்களாகும். இன்னாரின் நூல்களும் இறை ஞானத் தத்துவ ரகசியங்களைக் கொண்டவைகளாகும். இவர்களும் தமது நூலின் ஓரிடத்தில் '**தமாம் மௌஜூதாத் ஐன் தாத்தே ஹக் ஹே**' எனக் கூறுகின்றனர். சூபிய்யாக்களின் பரிபாஷை தெரியா தோரும் அன்னோரின் தோழமை கிடைக்காதோரும் தமக்கு உர்து அல்லது பார்ஸி மொழி தெரியுமென்று இப்படிப்பட்ட நூல்களை பார்வையிடுவாராயின் ஷெய்குல் அக்பர் அவர்களின் வார்த்தையை தவறுகப் புரிந்து கொண்டதை போல இப்படிப் பட்ட வாக்கியங்களேயும் தவறுகப் புரிந்து வழிதவறுவதற்குரிய வாய்ப்பு நிறையவே இருக்கிறது.

2666 கவிதைகளை கொண்ட மஸ்னவி ஷரீப் என்னும் நூல் இவர்களது நூல்களில் மிகவும் பிரபலமானதாகும். இந்நூலுக்கு பலபேர் விரிவுரை செய்துள்ளனர். அவர்களில் மௌலவி அஷ்ரப் அலி தானவி அவர்களும் ஒருவராகும். இந்நிலையில் மௌலானா காழி ஸஜ்ஜாத் ஹுஸைன் சாஹிப் என்பார் தமது விரிவுரையில் இந்நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஆய்வு செய்யக் கூடாதெனக் கூறுகிறார்.

## ஷத்ஹாத் அஸ்ஸூபிய்யா

இனி வஹ்தத்துல் உஜூத் என்பதற்கு எல்லாமே அல்லாஹ் தான் எனில், இந்நிலையில் ஷரீஅத்தின் பார்வையில் ஒவ்வொரு பொருளுக்கென்றும் ஓர் தனியான சட்டமுண்டு. உதாரணமாக தொப்பியை தலையிலும், செருப்பை பாதத்திலும் தான் அணிய வேண்டும். இவ்வாறே பாம்பைக் கண்டால் அதை அடிக்கத்தான் வேண்டும். அவ்வாறாயின் இதே அடிப்படையில் வஹ்தத்துல் உஜூதுடைய கருத்தை வெளிப்படையாக பேசுவோருக்கும் ஷரீஅத்தில் ஒரு சட்டமிருக்கத்தான் வேண்டும். அது, மதம் மாறியவர் என்பதே அச்சட்டமாகும்.

எனது எதார்த்தம் அல்லாஹ்வாகும். அல்லாஹ் அல்லாத எதுவுமே இல்லை என்பது போன்ற வார்த்தைகளை முரீதுகள் சொல்லக் கேட்டால் அவரை தௌபா செய்யச் சொல்லுங்கள். இல்லையேல் அவனை கொன்று விடுங்கள். நிச்சயமாக அவன் ஸிந்தீக்காகும் என்பதாக அல்லாமா ஷஃறானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது 'அல் அன்வாருல் குத்ஸிய்யா' என்னும் நூலின் பக்கம்200ல் கூறுகின்றனர்.



தோற்றமாக்கப்பட்டிருப்பவை அனைத்தும் அல்லாஹ் தானென்று கூறுபவனை கொல்ல முடியுமாயின் நான் கொன்று விடுவேன் என்றும், நான் அல்லாஹ் எனக் கூறுவது மிக மோசமானதோர் வழி கேட்டுக்குரிய கூற்றாகும் என்பதும் அஷ்ஷெய்கு முஹம்மத் பின் அபீ ஜம்ரா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சொல்லாகும். இது 'லவாகிஹுல் அன்வாரி பீ தபகாத்தில் அக்யாரி' (அத்தபகாத்துல் குப்ரா) என்னும் நூலின் பக்கம் 351ல் கூறப்பட்டுள்ளது.

எல்லாமே அல்லாஹ் தானென்று ஒருவன் எண்ணு வானாயின் அவன் எப்படிப்பட்ட படித்தரத்தை உடையவனாக இருப்பான்? அதேநேரம் அந்த எண்ணத்திற்குரிய தீர்ப்பு என்ன என்பதையும் இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் 'தன்பீஹுல் கபிய்யி' என்னும் நூலை பார்வை யிடுவோர் நன்கு அறிவர்.

இத்தனை ஏன்! இப்படிப்பட்ட வார்த்தையை சொன்ன மன்ஸூருல் ஹல்லாஜ் ரஹிமஹுல்லாஹ் அவர்களையே எடுத்துக் கொள்ளுங்களேன். அவர்களால் சொல்லப்பட்ட அந்த வார்த்தை அவர்களின் சுய நினைவுடைய நிலையில் சொல்லப் பட்டதல்ல என்பதாகத்தான் ஞானவான்கள் கூறுகின்றனர். இதனை இமாம் கஸ்ஸாலி (பதாவா ஹதீதிய்யா பக்கம்-314)லும் கௌஸுல் அஃழம் அவர்கள் (நஷ்ருல் மஹாஸினில் ஆலிய்யா பக்கம்-287)லும் வரலாற்றாசிரியர் இப்னுல் அதீர் அவர்கள் (அல் காமில், 6-671)லும் கூறுகின்றனர். மன்ஸூருல் ஹல்லாஜ் சுய நினைவுடைய நிலையில் இருந்திருந்தால் இப்படியொரு வார்த்தையை சொல்லியே இருக்க மாட்டார் என்பதாக குத்புஸ் ஸமானாகவும் மிகப்பெரும் தரீகத்தின் ஸ்தாபகரும் எனது ஆக்காவுமாகிய அஷ்ஷெய்கு அஹ்மத் கபீரூர் ரிபாயி ரழியல் லாஹு அன்ஹு அவர்கள் (அல் புர்ஹான்) என்னும் நூலிலும் கூறுகின்றனர்.

அடுத்து இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது 'அல் பிதாயா' என்னும் நூலின் 11-135ல், ஹல்லாஜ் ரஹிமஹுல் லாஹ் அவர்கள் தவறிழைத்து விட்டார்களென்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். இவர் ஒரு ஸிந்தீக்காகும் என்பதே பெரும்பான்மையோரின் கருத்தாகும் என இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'லிஸானுல் மீஸான்'

என்னும் நூலின் 3-142ல் கூறுகின்றனர். இவரை பெரும்பான்மையான நன்மக்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை. இவருக்கு ஏற்பட்ட இந்நிலையானது அல் இமாமுர் ரப்பானி ஷெய்குஸ் ஸூபிய்யா எனப் போற்றப்படும் அம்ர் பின் உஸ்மான் அல் மக்கி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பத்துஆ - சாபக் கேடாகும் என்பதாக எல்லா ஷெய்குமார்களும் சொல்வதாக அல்லாமா ஷஃறானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது 'அல் அன்வாருல் குத்ஸிய்யா' என்னும் நூலின் பக்கம்-233ல் கூறுகின்றனர். பாமரர்கள் ஸிந்தீகீன்களாகி விடுவதை பயந்ததால் தான் ஹழ்ரத் அபூபக்ர் ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹல்லாஜ் அவர்களின் வார்த்தைக்குரிய எதார்த்தம் தெரிந்தும் பத்வா வழங்கியதாக அல்லாமா முனாவி என்பார் தமது 'தபகாத்துஸ் ஸூபிய்யா' என்னும் நூலின் 4-54ல் கூறுகிறார். எனவே சூபிகளாக இருப்போர் இவ்வாறான கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்லாது ரகசியமாக பாதுகாத்து வந்தனர். இப்படி இருப்போர் தான் உண்மையில் சூபியுமாகும். இவர்கள் தான் காமிலான ஸாலிஹான பின்பற்றத்தக்க வலித்தன்மை உடையவருமாகும்.

இதே போன்று தான் ஷெய்குல் அக்பர் அவர்களின் கருத்துக்களுமாகும். எனது நூல்களில் நான் எழுதிய விஷயங்களனைத்தும் சிந்தித்து தீர விசாரித்து எழுதிய கருத்துக்களோ அல்லது இன்னொருவர் அறிவித்துத் தர எழுதப்பட்டவைகளோ அல்ல. மாறாக எனது உள்ளத்தில் ஏற்பட்ட உதிப்புகளாகும் என்பதாக ஷெய்குல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர். ஆனால் தற்காலத்தில் சொல்லப்படும் விளக்கங்கள் முன்னரே திட்டமிட்டு சொல்லப்படுபவைகளாகும். ஆதலால் ஒரு வகையில் இவர்களும் சுய நினைவுடைய நிலையில் சொல்லவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும் ஷெய்குல் அக்பர் அவர்களின் புதூஹாத்துல் மக்கிய்யா, புஸூஸுல் ஹிகம் இவ்வாறே அஷ்ஷெய்கு அப்துல் கரீம் ஜியலி அவர்களின் அல் இன்ஸானுல் காமில் போன்ற நூல்களில் பேசப்பட்டுள்ள விஷயங்கள் வஹ்பிய்யத்தான அறிவுகளாகும். இறை ஞானங்களின் ஊற்றுக்களாகும். கஷ்பின் வாயிலாகக் கிடைத்த எதார்த்தங்களாகும். இவைகள் புத்தகங்களை வாசிப்பதால் கிடைக்கப் பெறாது. ஞானிகள் மட்டுமல்ல சாலிகீன்களாக இருப்போர் கூட இந்த நூல்களை



படிக்க வேண்டும். ஞானிகளாகவும் சாலிகீன்களாகவும் இருப்போர் சொல்லாமல் மௌனம் சாதித்த விஷயங்களை ஒரு சாதாரண பொடு போக்குடைய மார்க்கப் பேணுதல் இல்லாதவர் சொல்வதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை நாம் ஒரு உபதேசமாகத் தான் சொல்கிறோம். மற்றபடி யார்மீதும் எந்தவொரு காழ்ப்புணர்வையும் கொண்டல்ல.

ஹழ்ரத் மன்ஸூருல் ஹல்லாஜ், ஹழ்ரத் அபூ யஸீதில் பிஸ்தாமி ரஹிமஹுமல்லாஹ் போன்றோரின் கூற்றுக்களே சுய நினைவுடைய நிலையில் சொல்லப்படாதவைகள் என்றும் அவைகளை ஆதாரமாகக் கொள்ள முடியாதென்றும் அறிஞர்கள் கூறும்போது அந்தக் கீதையில் சொல்லப்பட்டுள்ளது இந்த மஸ்தான் சொன்னார் என்பதையெல்லாம் எவ்வாறு ஆதாரமாக ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? ஜும்ஹூத் மாலை என்னும் நூல் வழிகேட்டுக்குரிய கருத்துக்களை கொண்டுள்ள ஒரு நூலேயன்றி மற்றபடி ஞானக் கருத்துக்களை கொண்டுள்ள ஒரு நூலல்ல என அதனை மறுத்து அல்லாமா அப்துல்லாஹ் பின் உமர் பாதிபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'அஸ்ஸைஃபுல் வாரிது லி இங்ராகில் முஆனதி' என்னும் பெயரில் பிரசுரமொன்றையே எழுதியுள்ளனர்.

இவர்கள் ஷெய்குல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஏற்றுக் கொள்வதோடு (அவர்களின் நூல்களில் பேசப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் சமுதாயச் சீரழிவுக்குரிய) வார்த்தைகளுக்கு விளக்கமளிக்கும் ஒருவராகவும் திகழ்பவர்கள். அப்படி இருந்தும் அல்லாஹுதஆலாவுடைய தாத்து தான் மனிதத் தோற்றத்தில் உருப்பெற்று வெளியாகியுள்ளதென்று எவரேனும் சொல்வாராயின், ஒன்று அவர் சூபிய்யாக்களுடைய பரிபாஷையை அறியாதவராக இருப்பார். அல்லது அவர் மார்க்கத்தில் புதிதான ஒன்றை தோற்றுவிக்கும் எண்ணத்தில் வேண்டுமென்றே திட்டமிட்டு சொன்னவராக இருப்பார். இவரால் சமுதாயம் சீர் பெறாது. இத்தகையோர் திருந்தப் போவதுமில்லை. ஆனால் அதேநேரம் முதல் வகையை சார்ந்தோருக்கு விஷயத்தை தெளிவுபடுத்தி அவர்களை காப்பாற்றுவது ஆரிபீன்கள் மீது கடமையாகும். இந்நிலையில் மனிதனாக, ஜின்னாக, ஜடப் பொருளாக, புற் பூண்டுகளாக, விஷ ஜந்துக்களாக, அமரர்களாக, ஷைத்தான்களாக இருப்பவை

அனைத்தும் அல்லாஹ்வாகத் தான் இருக்கின்றன என்று சொல்லப்படுவதை ஒரு பைத்தியக்காரனல்ல அவனை நேசிப் பவன் கூட ஏற்றுக்கொள்ள மாட்டான் என்றும் கூறுகின்றனர். இப்பெரியார் இன்ஸான் காமில், துஹ்பத்துல் முர்ஸலா போன்ற பல நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை இந்த நூலில் தமது கருத்துக்கு ஆதாரமாகக் கையாளுகின்றனர்.

இது போன்றே ஹல்லாஜ் ரஹிமஹுமுல்லாஹ் அவர்களின் காலத்தில் நான் இருந்திருந்தால் அவர்களை காப்பாற்றி இருப்பே னென ஹழ்ரத் கௌஸுல் அஃழம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லும் வாக்கியமானது, ஹல்லாஜ் ரஹிமஹுல் லாஹ் அவர்கள் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொண்டதாக அர்த்தப்படுத்த முடியாது. மாறாக அந்த வார்த்தையை ஹல்லாஜ் அவர்கள் எந்த நிலையில் வைத்து சொன்னார்கள் என்பதை நான் தெளிவுபடுத்தி அவரை காப்பாற்றி இருப்பேன் என்பதே அதற் குரிய பொருளாகும். பின்னும் கௌஸுல் அஃழம் அவர்கள் தமது குன்யத்துத் தாலிபீன் என்னும் நூலில் எதை ஏவ வேண்டும் எதை தடுக்க வேண்டும் என்பது பற்றி பின்வருமாறு கூறுகின்றனர்,...

**'கிதாப் - குர்ஆன், ஸுன்னா - ஹதீத், அக்ல் - புத்தி'** ஆகிய இம்மூன்றுக்கும் உட்பட்ட விஷயங்களை மஃரூப் (புகழுக் குரியவை) என்றும், இவைகளுக்கு மாற்றமானவைகளை முன்கர் (இகழத்தக்கவை) என்றும் கூறி அதனை இரு பங்காகப் பிரிக்கின்றனர். ஐவேளை தொழுதல், புனித ரமழான் மாதத்தில் நோன்பு வைத்தல், ஹஜ்ஜுச் செய்தல், விபச்சாரம் செய்யா திருத்தல், மது அருந்தாதிருத்தல், கொலை செய்யாதிருத்தல், கொள்ளை அடிக்காதிருத்தல் போன்றவை யாருக்கும் விதி விலக்குக்குரியதல்ல. அனைவரும் இதற்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும். இவைகளை யார் வேண்டுமானாலும் செயல் படுத்தலாம். இது முதல் வகையாகும்.

இரண்டாவது வகையானது பாமரர்களுக்குரியதல்ல. மாறாக சிலருக்கு மட்டுமே குறிப்பாக்கப்பட்டதாகும். அது அல்லாஹ்வை பற்றிய விஷயமாகும். அல்லாஹ்வை குறித்து பாமரர்கள் மத்தியில் பேசப்படும் கருத்துக்கள் குர்ஆன் ஹதீதுக்கு மட்டும் உட்பட்டதாக இருந்தால் போதாது. மாறாக அக்கருத்துக்கள் அவர்களால் ஜீரணித்துக் கொள்ளும்படியான



கருத்துக்களாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவைகள் தடுக்கப்பட வேண்டும் என்பதாக கௌஸுல் அஃழம் அவர்களே கூறுகின்றனர்.

இதையெல்லாம் தெரிந்திருந்தும் ஞான சம்பந்தமான விஷயங்களை எல்லோருமே தெரிந்திருக்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்வது வீண் பிடிவாதமாகும். இதனால் சமுதாயமே சீரழிந்து போய் விட்டது. இதில் தமது கருத்தை உண்மை தானென உறுதிப்படுத்த குர்ஆனையும் ஹதீதையும் ஆதாரமாகக் காட்டுவதைக் கண்டு ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை. ஏனெனில் காதியானிகள் கூட குர்ஆன் ஹதீதைத் தான் ஆதாரமாகக் காட்டுகின்றனர். இத்தனை ஏன்! வஹ்ஹாபிகள் கூட இவைகளை தான் ஆதாரமாகக் காட்டுகின்றனர். முழுக்க முழுக்க ஹதீதையே ஒதுக்கி வைத்துள்ள அஹ்லெ குர்ஆனுடைய இயக்கத்தை சார்ந்தவர்களும் கூட தமது கூற்றுக்கு குர்ஆனைத் தான் ஆதாரமாகக் காட்டுகின்றனர். அதற்காக அவர்களை நாமும் ஆதரிக்க வேண்டுமென்று சொல்ல முடியுமா?

உண்மையையும் சத்தியத்தையும் தெரிந்து கொள்ள பேராவல் மிக்க தீட்க்ஷண்யமான பார்வை பெற்றுள்ள நல்லுள்ளம் கொண்ட நல்லோர்களே! இதுவரை நாம் உங்களுக்கு அல்லாஹ் ரஸூலுடைய பேரருளால் குர்ஆன் ஹதீத் மற்றும் பேரறிஞர்களான சூபிய்யாக்களின் கூற்றுக்களை உங்களின் மேலான பார்வைக்கு தந்தோம். அதில் வஹ்தத்துல் உஜூதைப் பற்றியும் கொஞ்சம் போல் சொல்ல வேண்டிய கட்டாயம் நேர்ந்து விட்டது. இதைப்பற்றி உங்களிடமுள்ள நூல்களில் கூறப்பட்டுள்ள விளக்கத்தை ஸாலிஹீன்களான நாதாக்களின் கருத்துக்களோடு அருள் கூர்ந்து ஒருமுறை ஒப்பிட்டு பார்த்து விட்டு அதன்பின் ஒரு முடிவுக்கு வாருங்கள். இதில் ஞான மார்க்கம் குறித்த தொடர்பில்லாதவர்கள் தயை கூர்ந்து அதன் பக்கமாக செல்ல வேண்டாமென்றும் வன்மையாக எச்சரிக்கிறோம்.

வஹ்தத்துல் உஜூதைப் பற்றி தெரிந்து கொள்ளாதவர் ஒரு உண்மையான முஃமினல்ல என்றும், அவர் கலிமாவுக்குரிய சரியான பொருளை அறியாமல் கலிமா சொன்னவர் என்றும், அக்கலிமாவானது முஹ்கமாத்தை சார்ந்த - வலிந்துரை செய்யக் கூடாத வசனமென்றும் சொல்லப்பட்டால் அவ்வாறு சொன்னவர்

யார் என்பதையும், இன்றுவரை கலிமாவுக்கு சொல்லப்பட்டு வரும் விளக்கத்தை தவறானதென்றும், சொன்னவர் யார் என்பதையும் கேட்க வேண்டிய அவசியம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதைப்பற்றி நமக்குக் கிடைத்த தகவலானது,...

இந்திய தேசத்தின் வட புலத்தில் லக்னோ என்னும் பகுதியைச் சேர்ந்த மௌலவி அப்துர்ரஹ்மான் பின் முஹம்மத் ஹஸன் பின் அலமுல் ஹுதா பின் ஹஸன் முஹம்மத் பின் தீன் முஹம்மத் பின் அரப் ஷாஹ் அஸ்ஸிந்தீ என்பார் ஹிஜ்ரி *1161*ல் ரூபாஹ் என்னும் கிராமத்தில் பிறந்து *1245* துல்கஃதா ஆறும் நாள் வெள்ளிக்கிழமை அன்று இறையடி சேர்ந்தவராகும். இவர் தனது சகோதரரான அப்துல் ஹகீம், மற்றும் ஹாபிழ் முஹம்மத் பாழில் (கைராபூர்), அஷ்ஷெய்கு அஸதுல்லாஹ் (மஹாரோன்), அஷ்ஷெய்கு கலீமுல்லாஹ் (அன்கஹ் பிலாவுல்), அஷ்ஷெய்கு மஹ்மூத் (ராம்பூர்), அல்லாமா அப்துல் அலி பின் நிழாமுத்தீன் லக்னவி போன்றோரிடம் கல்வி கற்றார்.

இதன்பின் மதன்பூர், ஹைதராபாத், தக்கன் போன்ற இடங்களில் ஆசிரியராகவும் பணியாற்றினார். பின்னர் *1205-6*ல் ஹஜ்ஜுக்காக சென்று வந்தவர் தமது சகோதரரிடமே தரீக்கத்திற்குரிய அனுமதியை பெற்றார். பின்னர் ஆறு மாதங்கள் கழித்து அஜ்வதியா (அயோத்தி) என்னும் ஊருக்குச் சென்று அங்கிருந்த அஷ்ஷெய்கு பரீதுத்தீன் மஸ்வூத் ரஹிமஹுல்லாஹ் என்பாரின் கப்ரடியில் சிலகாலம் வரை இருந்தார். அதன்பின் அஜ்மீர் ஷரீப் சென்று குத்புல் ஹிந்த் அதாயே ரஸூல் காஜா கரீப் நவாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பாதக் கமலத்தில் (கப்ரில்) கொஞ்ச காலம்வரை தங்கியிருந்தவர், பின்னர் டில்லி சென்று அஷ்ஷெய்கு அப்துல் அழீம் தெஹ்லவி என்பாரிடம் மீண்டும் பைஅத்துப் பெற்று பல ஊர்களுக்கும் சென்றவர் *1214*ல் லக்னோவுக்கு வந்து சேர்ந்தார். அதன்பின் ஏழு ஆண்டுகள் வரை அஷ்ஷெய்கு முஹம்மத் மீறு ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கப்ரடியில் தங்கியிருந்தவர் பின்னர் பின்டாயின் என்னும் மஸ்ஜிதிலேயே இறுதிவரை தங்கி விட்டார். மிப்தாஹுத் தௌஹீத், ஜஹ்துல் மக்ல், கலிமத்துல் ஹக், காசிரத்துல் அஸ்னாம் என்பவை இவரால் இயற்றப்பட்ட நூல்களாகும். (நூல் : நுஸ்ஹத்துல் கவாதிர், அல் அஃலாமு பிமன் ஃபீ தாரீகில் ஹிந்தி மினல் அஃலாம், *7-281*) இவர் தமது நூல்களில் லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவுக்கு தருகின்ற விளக்கத்தை பாருங்கள்,...



والحسرة كمال الحسرة على ان اكابر العلماء شرقا وغربا وسلفا وخلفا مفسرين ومحدثين ومجتهدين ومقلدين ومتكلمين ومتفقهين قد حرفوا الكلمة الطيبة عن مواضعها وبدلوا مضمونها بالخبيثة واولوها من المحكم الى المتشابه فصانوا لسانهم عن الشرك لتلفظهم بلا اله الا الله واشركوا بالقلب بلا اله الا غير الله من حيث لم يحتسبوا نعوذ بالله منها.

''கிழக்கிலும் மேற்கிலும் (முழு உலகிலுமுள்ள) ஸலபு (முன்னோர்)களும் கலபு(பின்னோர்)களும் முபஸ்ஸிரீன்களும் முஹத்திஸீன்களும் முஜ்தஹிதீன்களும் முகல்லிதீன்களும் முதகல்லிமீன்களும் முதபக்கிஹீன்களுமாகிய பேரறிஞர்கள் அனைவரும் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் வாக்கியத்திற்குரிய உண்மையான விளக்கத்தை சொல்லாது முழுக்க முழுக்க அதற்கு மாறான கருத்தை திணித்தது மிகப் பெரும் கைசேதமாகும். அக்கலிமாவை நாவைக் கொண்டு மொழிவதன் வழியாக அவர்கள் தம்மை ஷிர்க்கை விட்டும் பாதுகாத்துக் கொண்ட போதிலும் அவர்களை அறியாமலேயே அல்லாஹ் அல்லாத ஒன்று இருப்பதாக எண்ணி, உள்ளத்தளவில் ஷிர்க்குடையோராகவே இருக்கின்றனர். இப்படிப்பட்ட கொள்கையிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக'' என்று கூறுபவர், பின்னர் வேறுபல விஷயங்களை எல்லாம் சொல்லிவிட்டு,...

وبالجملة انهم حرفوا الكلمة الطيبة عن موضعها معنا ومالوا الى الكلمة الخبيثة كاليهود فانهم ايضا يحرفون الكلم عن مواضعهم فاليهود حرفوا نعت رسول الله صلى الله عليه وآله وسلم الى ذم دجال واهل الاسلام حرفوا توحيد سبحانه الى ما رغبوا اليه والعياذ بالله من التحريفين فزادوا فى التحريف بقدم واحد ولكن الحمد لله على عملهم بالمصراع : با خدا ديوانه باش وبا محمد صلى الله عليه وآله وسلم هوشيار. فضلوا فاضلوا من قلدهم.

''ஆக இந்த அறிஞர்களனைவரும் (நறுமணமான) கலிமத்துத் தையிபாவிற்குரிய விளக்கத்தை சொல்லாது அக்கலிமாவை கபீஸான(துர் நாற்றமிக்க)தாக ஆக்கி விட்டனர். இவர்களின் இச்செயல் யூதர்களின் செயலுக்கு ஒப்பாகவே அமைந்து விட்டது. ஆம். யூதர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை பற்றி கூறப்பட்டிருந்த கருத்துக்களை திரித்து

**தவறானதொரு விளக்கத்தை கூறினர். ஆனால் இஸ்லாமியர்கள் அவர்களை விட ஒருபடி முன்னால் சென்று அல்லாஹுதஆலாவின் தௌஹீதுடைய விஷயத்தில் தஹ்ரீப் (மாற்றம்) செய்து விட்டனர். இவ்விரு கூட்டத்தாரை விட்டும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. அதேநேரம் இந்த இஸ்லாமியர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய விஷயத்தில் கௌரவமாக செயல்படுவது அல்லாஹ்வை புகழத்தக்க செயலாகும். இவ்வாறு அவர்கள் வழி கெட்டது போல அவர்களை பின் தொடர்ந்தோரையும் வழி கெடுத்து விட்டனர்''** என்று கூறுகிறார்.

மௌலானா அவர்கள் கலிமத்துத் தையிபாவிலுள்ள 'இலாஹுன்', 'இல்லல்லாஹ்' என்பவைகளுக்குரிய அவருடைய விளக்கமானது, ஸலபுகளான முன்னோர்களின் கருத்துக்கு முற்றிலும் முரணான ஒன்றென்பது அவரது மாணவர்களின் கருத்தாகும். வஹ்தத்துல் உஜூதைக் குறித்து விளக்கமளிப் போரில் நிகரற்ற ஒருவராகத் திகழ்ந்த ஹழ்ரத் அஷ்ஷாஹ் காஜா மெஹ்ர் அலி ஷாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இவருடைய கருத்துக்களை மறுத்து 'தஹ்கீகுல் ஹக் ஃபீ கலிமத்தில் ஹக்' என்னும் பெயரில் நூலொன்றை தொகுத்தனர். இதுபோன்றே வஹ்தத்துல் உஜூதுடைய கொள்கையை ஏற்று அதற்கு விளக்கமும் வழங்கிய மற்றொரு பேரறிஞரான ஸிராஜுல் ஹிந்த் ஹுஜ்ஜத்துல்லாஹ் ஸெய்யிதுல் உலமா என்றெல்லாம் அழைக்கப்பட்ட அஷ்ஷெய்கு அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் இவருடைய கருத்துக்கு மறுப்புரை எழுதியவர்களாகும். இவர்கள் மேற் கண்ட மௌலவி அப்துர்ரஹ்மான் லக்னவியின் காலத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அம்மறுப்புக்குரிய விஷயங்களை பார்க்க விரும்புவோர் 'பதாவா அஸீஸிய்யா' என்னும் நூலைப் பார்க்க.

அடுத்து மெஹ்ர் அலி ஷாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இவரது கருத்துக்களை மறுத்து எழுதிய போதிலும் இவரை இழிவாக ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதற்கு மாறாக இவரை ஒரு மஜ்தூபான நிலையினைக் கொண்ட சூபியென்றே குறிப்பிடுகின்றனர். 'தத்கிரா உலமாயே அஹ்லுஸ் ஸுன்னா' என்னும் நூலின் 116ம் பக்கத்தில் மௌலவி அப்துர்ரஹ்மான் என்னும் இவரை சூபிய்யாக்களில் ஒருவராகக் குறிப்பிட்டுள்ள



தோடு இதே நூலின் 246ம் பக்கத்தில் ஹழ்ரத் மெஹ்ர் அலி ஷாஹ் அவர்களால் இவருக்கு மறுப்பாக எழுதப்பட்ட 'தஹ்கீகுல் ஹக்' என்னும் நூலை எதார்த்தமான ஞானக் கருத்துக்கள் நிறைந்த நூலென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மௌலவி அப்துர் ரஹ்மான் லக்னவியுடைய கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு பிரச்சாரம் செய்ய முடியாத சூபிய்யாக்களுடைய ஷத்ஹாத் துடைய நூல்களில் உள்ளடக்குவதே ஏற்புடையதாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அன்புக்குரிய இஸ்லாமியத் தோழர்களே! எல்லாமே அல்லாஹ் தான் என்பதே கலிமாவுக் குரிய உண்மையான பொருளாகும் என்னும் இவரது வாதத்தை ஒரு பேச்சுக்காவது ஏற்கலாமா இல்லையா என நம்மிடம் வினவுவீர்களேயாயின் கண்டிப்பாக இல்லையென்று தான் நாம் கூறுவோம். பெருமக்களாகிய நாதாக்களை மதிக்கத் தெரியாதவர் களின் தோழமையிலிருந்து நம்மை பாதுகாக்குமாறு அல்லாஹ் விடம் அந்த நல்லோர்களையே முன்னிறுத்தி நாம் பிரார்த் திக்கிறோம்.

இனி சிருஷ்டிகளுக்கென சுயமானதொரு உள்ளமை இல்லை யெனில் ஹாதிஸான நவீனமாகிய உள்ளமையைக் கொண் டுள்ள படைப்புக்கும் கதீமான பூர்வீக நிலையினை கொண்டுள்ள அல்லாஹ்வுக்கும் இடையேயுள்ள தொடர்பென்ன என்பதாகக் கேட்பீர்களாயின்,...

وانما الوجود الحادث والقديم مربوط بعضه ببعض ربط اضافة
وحكم لا ربط وجود عين بعين.

**''அல்லாஹ்வுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பானது ஒரு தத்துவமான தொடர்பாகும். இதில் அல்லாஹ் சிருஷ்டி என்பதோ அல்லது சிருஷ்டி அல்லாஹ் என்பதோ இல்லை. காரணம் அல்லாஹ்வும் அடியானும் ஒரே மாதிரியான படித் தரத்தில் ஒன்றாக மாட்டான்''** எனக் கூறுவது அல் மிஸ்குல் அத்பர் அஷ்ஷெய்குல் அக்பர் இப்னு அரபி அவர்கள். இதுபோன்றே இந்தியாவில் பிரச்சித்திப் பெற்ற காழியும் அறிஞர்களில் ஒருவருமான மௌலானா பழ்லுர்ரஹ்மான் என்பாரும் கலிமத்துல் ஹக்கை மறுத்து 'கிதாபுத் தஷ்யீத் பில் அதில்லதில் மஃகூலதி வல் மன்கூலதி பிமா லா மஸீத' என்றொரு நூலை தொகுத்திருக் கிறார்கள். இந்நிலையில் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் தான்

உள்ளமை உண்டு. அதுவும் பூர்விகமானதாகும் எதார்த்தமான தாகும் நிரந்தரமானதாகும். அதேநேரம் படைப்புக்களுக்கென்று எந்தவொரு உள்ளமையும் கிடையாது. இனி படைப்புக்களின் உள்ளமையானது புதிதாக அல்லாஹ்வை கொண்டு தோற்றம் பெற்றதாகும்.

ان العالم ما هو عين الحق تعالى اذ لو كان عين الحق تعالى ما
صح كون الحق تعالى بديعا.

''நிச்சயமாக அகிலம் என்பது அல்லாஹ்வாக இல்லை. அவ்வாறு அல்லாஹ்வாக இருப்பின் அல்லாஹ் பதீஆக இருத்தல் என்பது சாத்தியப்படாது என்றும் குறிப்பிடுவதை நாம் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம்''

அல்லாஹ்வின் மீதாணையாக நான் வஹ்தத்துல் உஜூதை ஏற்கும் ஒருவனுகும். அதன் அந்தரங்கம் பகலில் பார்க்கப்படும் சூரியனைப் போன்று என்னிடம் அறியப்பட்ட விஷயமாகு மென்று குறிப்பிடும் ஆஷிகே ரஸூல் அல்லாமா அஹ்மத் ரழா பரேலவி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்கள்,...

ان الصفات ليست عندنا غير الذات كما انها ليست عين الذات.

''நிச்சயமாக ஸிபாத் - பண்புகளாகிறது நம்மிடம் தாத்துக்குப் புறம்பானதல்ல. அதேநேரம் அவை தாத்தாகவும் இல்லை. (அதாவது குத்ரத்துன் என்பது அல்லாஹ்வுடைய ஸிபத்துக் களில் ஒன்ருகும். இப்பண்பானது அல்லாஹ் என்னும் மூலப் பொருள் அல்லாத ஒன்றல்ல. எனினும் அது அல்லாஹ்வாகவும் இல்லை)'' என்று 'அல் முஸ்னதுல் மு.:.தமது' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

هو قائم بذاته وكل ما سواه قائم به وأنه موجود بذاته لا بغيره
فكل ما سواه موجود به لا بذاته.

''அல்லாஹுதஆலா தனக்குத் தானே சுயமாக நிலைத் திருக்கக் கூடியவனுவான். அவனையன்றி உள்ள அனைத்தும் அவனைக் கொண்டே நிலை பெற்றுள்ளதேயன்றி வேருென்றைக் கொண்டல்ல. இவ்வாறே அவன் தானுகவே இருப்பவனே அன்றி வேருென்றைக் கொண்டல்ல. அவனல்லாதவை அனைத்தும் அல்லாஹ்வைக் கொண்டு தோற்றம் பெற்றவைகளேயன்றி தம்முடைய தாத்தைக் கொண்டல்ல'' என்பதாக இமாம் கஸ்ஸாலி



ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுவதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் ஷெய்குல் அக்பர் அவர்கள் தாமாகவே ஹழ்ரத் ஸெய்யிதுனு இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இஹ்யா உலூமுத்தீன் என்னும் நூலை பார்வை யிடுபவர்களாக இருந்துள்ளனர் என்பதும் இங்கே குறிப்பிடத் தக்க ஒன்ருகும். (ஷவாஹிதுல் ஹக், பக்கம்-420) ஆதலால் இதுபோன்ற விளக்கங்களில் ஈடுபட்டு உங்களின் ஈமானை நீங்கள் இழந்துவிட வேண்டாம்.

சகோதரா! உலகிலுள்ள எந்தவொரு பொருளை வேண்டு மானுலும் எடுத்துப் பார். அல்லது உன்னையே நீ உற்றுப்பார். அவை ஒவ்வொன்றும் பல்வேறு பொருட்களைக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்டு தோற்றம் பெற்றிருப்பதை நீ பார்க்கலாம். நீ அணியும் ஆடைகளில் கூட உள்ளாடை என்றும் வெளி யாடை என்றும் இருவகை இருப்பதை நீ பார்க்கலாம். கவிதை முதல் கட்டுரை நாவல் வரை அவைகள் இரு நிலைகளை கொண்டிருப்பதைப் போல இவைகள் இரு வகை அர்த்தங்களை கொண்டிருப்பதையும் நீ பார்க்கலாம். இனி பல்வேறு அர்த் தங்களை கொண்ட வார்த்தைகளற்ற கவிதையை எந்தக் கவிஞனுலும் உருவாக்கவே முடியாது. அவனுடைய கவிதைகள் அவ்வாறு இருக்கவும் கூடாது. அதேநேரம் அக்கவிதைகளின் எதார்த்தமான அர்த்தமானது, அதை எழுதியவனுக்கும் அவனைச் சார்ந்தோருக்கு மட்டும் தெரியுமேயன்றி அதை படிப்பவர் களுக்கோ அல்லது ரசிப்பவர்களுக்கோ அல்லது கேட்பவர் களுக்கோ அல்லது பாடுபவர்களுக்கோ தெரியாது. ஒவ்வொரு வரும் அவரவருக்குத் தோன்றிய விளக்கங்களை சொல்வார்கள். அதை பொய்யென்றும் சொல்ல முடியாது. அதற்கு மாருக நீ சொன்ன விளக்கம் பொய்யானது கவிஞன் சொன்னது தான் சரியானதென்று சொல்லப்படுமாயின் பாமரர்கள் கவிஞனையே பொய்யனென்று சொல்லி விடுவார்கள். காரணம் அக்கவிதைக் குரிய எதார்த்தமான அர்த்தம் அவனுக்குத் தெரியாது. இனி தனக்குத் தெரியாததை இல்லையென்று மறுக்கக் கூடாதென்று இருந்தாலும், தனக்குத் தெரியாத ஒன்றை மறுப்பதென்பது ஒரு புதிதான விஷயமல்ல. மாருக இது மனிதனுக்கே உரிய இயல்புத் தன்மையாகும். இதனுல் தான் அவரவர் தகுதிக்கேற்றவாறு உள்ள கருத்துக்களையும் விளக்கங்களையும் கூறுங்கள் என்பதாக நபிகள் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவில்கின்றனர்.

இது இவ்வாறிருக்க குர்ஆனுடைய வசனங்களுக்கு வெளிப்படையான அந்தரங்கமான இரு நிலைகள் என்பதெல்லாம் கிடையாது எனக் கூறப்படுவதை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது. காரணம் ஒரு சராசரி மனிதனுடைய வார்த்தைக்கே பல்வேறு அர்த்தங்கள் இருக்க முடியுமாயின் அவனைப் படைத்தவனுடைய வார்த்தைக்கு எத்தனை அர்த்தமிருக்க வேண்டும்! இதனாலேயே ஸெய்யிதுனா ஹழ்ரத் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "லிகுல்லி ஆயத்தின் ழஹ்ருன் வ பத்னுன்" ஒவ்வொரு வசனத்திற்கும் வெளிப்படையான அந்தரங்கமான அர்த்தங்கள் இருப்பதாகவும், ஸெய்யிதுனா ஹழ்ரத் இப்னு மஸ்வூத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "மா ஃபீஹா ஹர்புன் இல்லா லஹூ ழஹ்ருன் வ பத்னுன்" அந்தரங்கமான வெளிப்படையான அர்த்தமில்லாத ஒரு அட்சரமும் இல்லை என்றும் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். இதற்கெல்லாம் மேலாக ஸெய்யிதுனா ஹழ்ரத் அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹூ அவர்கள் பஸ்மலாவினுடைய 'பே' என்னும் அட்சரத்திற்குக் கீழேயுள்ள புள்ளிக்கே பல அர்த்தங்கள் இருப்பதாகச் சொன்ன தகவல்களை எல்லாம் நாம் தெரிந்திருக்கிறோம். இதே அடிப்படையில் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்னும் வசனத்திற்கு வலிந்துரை செய்யப்படாமல் அதற்குரிய நேரடியான பொருளைத் தான் சொல்லவேண்டுமென வைத்துக் கொண்டால் அதற்கு ஒரேயொரு அர்த்தம் மட்டும் தான் இருக்குமா என்ன?

இதுபோன்றே சூபிய்யாக்களின் கருத்துக்களை சாதாரணமாக பாமரர்களோ அல்லது உணர்வுகளின் ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் உலமாக்களோ அத்தனை எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது. இந்நிலையில் ஷெய்குல் அக்பர் அவர்கள் ஞானவான்களில் ஒருவர்தான் என்பதில் ஐயமில்லை என்பதால் அவர்களின் கருத்துக்களை சொல்லக் கூடாதென் பதிலும் ஐயமில்லை. அவர்களை மதிக்காதவர்கள் அருள் கூர்ந்து அவர்களது விஷயத்தில் மௌனத்தை கடை பிடியுங்கள். இப்படிப்பட்ட ஞானவான்களை தரக்குறைவாகப் பேசிய அக் காலத்திய அறிஞர்கள் பலர் தீரா நோய்களுக்கு உள்ளாக்கப் பட்டு அல்லாஹ்வைக் கொண்டு சோதிக்கப்பட்டிருக்கின்றனர். அதன்பின் அவர்கள் தமது தவறை உணர்ந்து அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடியபின் அந்நோய்களிலிருந்து விடுபட்டனர் என்பதற்கும் பல சான்றுகள் அல்லாமா யாபியீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாக அல்லாமா இப்னு



ஹஜர் ரஹிமஹுல்லாஹ் தமது பதாவாவில் கூறுகின்றனர். அவைகளில் சிலவற்றை ஷவாஹிதுல் ஹக் பக்கம் - 431, 432லும் காணலாம்.

"சூபிய்யாக்களாகிய ஞானவான்களின் பரிபாஷைகளை அறியாமல் அதனை அனுபவிக்காமல் அதைப்பற்றி பேசுபவர் அறியாமை என்னும் இருளில் சிக்கிக் கொண்டு விடுவார். மேலும் மூடப்பட்டுள்ள பாத்திரம் ஒன்றை தேனீக்கள் சுற்றிக் கொண்டிருப்பதைக் காணும் ஒருவர் அப்பாத்திரத்திற்குள் என்ன இருக்கிறது என்பதை அறியாமல் தேனீக்கள் சுற்றிக் கொண்டிருப்பதை மட்டும் காரணமாக்கி அப்பாத்திரத்தில் இதுதான் இருக்கிறதென்று சொல்வதைப் போன்றது தான் சூபிய்யாக்களின் கருத்துமாகும் என்பதாக சில ஸாலிஹீன்கள் கூறுகின்றனர்" எனவே சூபிய்யாக்களின் ஆடைகளை அணிவதாலோ அல்லது சூபிய்யாக்களின் கருத்துக்களை பேசுவதாலோ அல்லது இரவு பகலாக அவ்ராதுகளை ஓதுவதாலோ யாரும் அந்த நாதாக்களின் பட்டியலில் இடம் பிடித்துவிட முடியாது.

இமாமுத் தரீக்கா என்றும் மழ்ஹரு அஃலாமில் ஹகீகா என்றும் ஸெய்யிதுத் தாயிபா என்றும் போற்றப்படும் ஹழ்ரத் ஸெய்யிதுனா இமாம் ஜுனைதுல் பக்தாதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள், தான் அமர்ந்திருந்த அறையை மூடி அதன் திறவு கோலை தனது இருப்பிடத்திற்குக் கீழே வைத்துவிட்டு வீட்டின் சுரங்கப் பகுதியில் இருந்து கொண்டுதான் தௌஹீதைப் பற்றிய விளக்கத்தை சொல்வார்களாம். அவைகளை பாமரர்களால் புரிந்து கொள்ள முடியாதென்று தான் அவர்களும் கருதினர். பாமரர்களை தேவையில்லாது கஷ்டப்படுத்தி அவர்களை பரிதவிக்க விடக் கூடாதென அவர்கள் மீது கொண்ட பாசத்தினால் சொல்ல வேண்டாமெனத் தடுத்திருக்க நமக்கு மட்டும் தான் அக்கருத்துக்கள் ஈமானின் முக்கியமானதொரு அங்கமாகி விட்டதா?

எனவே சூபிய்யாக்களின் கருத்துக்களை அத்தனை லேசாக விளங்கிக் கொள்ள முடியாதென்பதால் "பல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்று மக்களிடையே பிரச்சித்திப் பெற்றவர் கூட காமிலான ஷெய்குடைய கரத்தை பற்றி பயிற்சி பெறாதவரை கமாலிய்யத்தை அடைய முடியாது" என்கின்றனர் அஷ்ஷெய்கு அபு அலி அத்தகபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். 'மௌஸூஆ' பக்கம்-403.

**"ஆழமான அறிவாற்றலைப் பெற்று நிகரற்ற அறிஞராக இருப்பவர் கூட ஒரு ஷெய்குடைய கரத்தை பற்றுவது அவசிய மாகும்"** இது இமாம் தீபி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கருத்தாகும். 'மௌஸூஆ' பக்கம்-403. ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் சூபிய்யாக்களின் கரத்தை பற்றி அவர்களால் உங்களுக்கு வழங்கப்படும் கடமைகளை சரிவர நிறைவேற்றி அல்லாஹ் ரஸூலின் திருப்தியை பெற்றிட முயற்சிக்குமாறு வேண்டி விடை பெறுவதோடு இதுவரை தரப்பட்ட விளக்கங் களே உங்களுக்குப் போதுமானதென்று நினைக்கிறோம். இனி இதைவிட அதிகமான விளக்கம் தேவையெனில் அதற்கு முன் உன்னை சித்தப்படுத்திக் கொண்டு அதற்குரியவர்களிடம் உன்னை ஒப்படைத்து விடு. அதற்கு மாறாக வஹ்தத்துல் உஜூதைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டதாக நீயாகவே கற்பனை செய்து கொண்டிருந்தால் அதைச் சொன்ன ஞானவான் களோடு உனது கற்பனையை ஒப்பிட்டுப் பார். தரிசாகிப் போன நிலத்தில் விதைக்கப்பட்ட விதையிலிருந்து முளைத்த கள்ளிச் செடிகளை பார்த்து அதை நீ பயிரென்று நினைத்துக் கொண்டால் அது யாருடைய தவறு?

இறுதியாக நாம் நமது தரீக்கத்துடைய சகோதரர்களுக்கு சொல்லிக் கொள்ளும் நல்லுபதேசமானது, ஹலாலான முறையில் சம்பாத்தியம் செய்து அதை உண்டு பர்ழான மற்றும் சுன்னத்தான தொழுகைகளை தொழுது வாருங்கள். எந்தத் தருணத்திலும் தொழுகையை விட்டு விடாதீர்கள். ஷரீஅத்திற்கு மாற்றமான காரியங்களை விட்டும் ஒதுங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு வழங்கப்பட்ட அவ்ராதுகளை தொடர்ந்து ஓதி வாருங்கள். அதிகமாக திக்ர் செய்வதோடு உங்களின் தரீக்கத்துடைய சகோதரர்களோடு ஒற்றுமையாகவும் சகோதரத்துவ மனப் பான்மையோடும் சேர்ந்து வாழுங்கள்.

சுன்னத் வல் ஜமாஅத்தின் மேம்பாட்டுக்காக உங்களால் இயன்றவரை பணிவிடை செய்யத் தவறாதீர்கள். இவ்விஷயத்தில் எமக்கும் இறைவா அருள் புரிவாயாக. இதுபோன்றே நாதாக் களென யார் இருந்தாலும் அவர்களை கட்டாயம் கண்ணியப் படுத்தி கௌரவியுங்கள். இறுதியாக கனி தரும் மரம் கல்லெறிக் குப் பயப்படாதெனக் கூறி விடை பெறுகிறோம். சூபிகளாகிய எம்மை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். எமது தோழமை யானது பரீட்க்ஷிக்கப்பட்ட மருந்தாகும். எம்மை விட்டும்



விலகிச் செல்வது உங்களை நீங்களே மாய்த்துக் கொள்வதற்கு ஒப்பாகும் என்ற எனது மதிப்புக்குரிய ஆக்காவாகிய எனதருமை பாட்டனரின் கருத்தை முன்வைத்து இதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

யா அல்லாஹ்! உனது ஹபீபாகிய எமக்கு ஷபீஆகிய திங்களொளி கோமான் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் இச்சிறு பணியை ஏற்று சமுதாயம் பயனடையச் செய்வாயாக. மேலும் மேலும் எமது சக்திக்கேற்ற மார்க்கப் பணியை மனம் தளராது செய்திட தௌபீக் செய்வாயாக. யா ரஸூலல்லாஹ்! எமது உள்ளத்தின் மேலான எண்ணங்களை நிறைவேற்றி வைப்பீர்களாக. உங்களை எங்களின் உயிருக்கும் மேலாக உயிர் நாடியாக எண்ணிச் செயல்பட்ட உத்தமர்களின் சகவாசத்தில் வாழுவதற்கு பரிந்துரைப்பீர்களாக. எம்மை விட்டும் பிரிந்த பெற்றோர் உற்றார் உறவினர் மற்றும் இஸ்லாமியச் சகோதரர்கள் அனைவரின் மண்ணறைகளையும் உங்களின் திருப்பொருத்தத்தை பெற்ற நன்மக்கள் வாழும் பூஞ்சோலையாக ஆக்கி அருள் புரிவீர்களாக. ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

صلى الله على محمد صلى الله عليه وسلم

صلى الله على محمد صلى الله عليه وسلم

صلى الله على محمد يارب صل عليه وسلم.

## قائمة المراجع    மூல நூல்கள்


١. الابريز من كلام سيدي عبد العزيز الدباغ : للشيخ احمد بن المبارك.
٢. اثبات المزية بابطال كلام الذهبي : للشيخ عبد العزيز الغمارى.
٣. الاجوبة الغزالية فى المسائل الاخروية : للشيخ الغزالى.
٤. ارغام المريد : للشيخ محمد زاهد الكوثرى.
٥. اعلام النبلاء : للشيخ الذهبي.
٦. الانوار القدسية فى معرفة قوائد الصوفية : للشيخ الشعراني.
٧. امداد المشتاق الى اشرف الاخلاق : المولوى اشرف على (اردو)
٨. ايضاح المقصود : للشيخ النابلسي.
٩. ايقاظ الهمم في شرح الحكم : للشيخ ابن عجيبة.
١٠. البداية والنهاية : للشيخ ابن كثير.
١١. تاريخ بغداد : للشيخ خطيب البغدادي.
١٢. تحقيق الحق في كلمة الحق : للشيخ مهر علي شاه (اردو)
١٣. تذكرة حسين بن منصور الحلاج : للشيخ امين الدين الخوشحالى (اردو)
١٤. التصوف الاسلامي فى الادب والاخلاق : الدكتور زكي مبارك.
١٥. التفسير الكبير : للشيخ ابن تيمية.
١٦. تنبيه الغبي بتبرئة ابن العربي : للشيخ السيوطي.
١٧. جامع كرامات الاولياء : للشيخ النبهاني.
١٨. الجام العوام عن علم الكلام : للشيخ الغزالي.
١٩. جمع الاسرار فى رد الطعن عن الصوفية الاخيار اهل التواجد بالاذكار : للشيخ النابلسي.
٣٠. الحاوى للفتاوى : للشيخ السيوطي.
٢١. حقائق عن التصوف : للشيخ عبد القادر عيسى.
٢٢. الحلل السندسية فى الاخبار والآثار الاندلسية : الامير شكيب ارسلان.
٢٣. حلية الاولياء وطبقات الاصفياء : للشيخ الاصبهاني.
٢٤. رسالة در بيان وحدة الوجود : للشيخ امداد الله (فارسى)





٢٥. روض الرياحين فى حكاياة الصالحين : للشيخ ابن اليافعي.
٢٦. سراج الطالبين شرح منهاج الطالبين : للشيخ دحلان الكديري.
٢٧. سيرت فخر العارفين : للشيخ سكندر شاه (اردو)
٢٨. السيرة المرضية في ترجمة مؤسسي الطرق الصوفية : للشيخ يوسف خطار محمد.
٢٩. السيل الوارد لاغراق المعاند : للشيخ عبد الله بن عمر باذبي.
٣٠. شواهد الحق فى الاستغاثة بسيد الخلق صلى الله عليه وآله وسلم : للشيخ النبهاني.
٣١. الصوفية والتصوف فى ضوء الكتاب والسنة : للشيخ هاشم الرفاعي.
٣٢. الضوء اللامع لاهل القرن التاسع : للشيخ السخاوي.
٣٣. طبقات الصوفية : للشيخ المناوي.
٣٤. الطبقات الصوفية : للشيخ عبد الرحمن السلمي.
٣٥. الطبقات الكبرى : للشيخ الشعراني.
٣٦. العبر في خبر من عبر : للشيخ الذهبي.
٣٧. العقيدة الحقة فى الرد على اهل الحلول والوحدة المطلقة : للشيخ احمد عبد الله الرفاعي.
٣٨. علم القلوب : للشيخ ابي طالب المكي.
٣٩. الغنية لطالبى طريق الحق عز وجل : للشيخ الجيلاني.
٤٠. الفتاوى الحديثية : للشيخ ابن حجر.
٤١. فتاوى رضوية : للشيخ احمد رضا خان (اردو)
٤٢. فتاوى عزيزية : للشيخ عبد العزيز محدث دهلوي (اردو)
٤٣. فيصلة وحدة الوجود والشهود : للشيخ الشاه ولي الله محدث دهلوي.
٤٤. الكامل فى التاريخ : للشيخ ابن الاثير.
٤٥. كتاب فى التصوف : للشيخ امين الكردي.
٤٦. كتاب النفائس العلوية فى المسائل الصوفية : للشيخ الحبيب عبد الله بن علوي الحدادي.
٤٧. كتاب الوافي بالوفيات : للشيخ الصفدي.

٤٨. كشف الحجاب والران عن وجه أسئلة الجان : للشيخ الشعراني.

٤٩. كشف المحجوب : للشيخ الهجويري.

٥٠. الكواكب الزاهرة فى اجتماع الاولياء يقظة بسيد الدنيا والآخرة صلى الله عليه وآله وسلم : للشيخ الشهير ابن مغزيل.

٥١. لسان الميزان : للشيخ العسقلاني.

٥٢. ما هو التصوف : للشيخ امين.

٥٣. مرآة الجنان وعبرة اليقظان فى معرفة ما يعتبر من حوادث الزمان : للشيخ ابن اليافعي.

٥٤. المستند المعتمد : للشيخ احمد رضا.

٥٥. المضنون به على غير اهله : للشيخ الغزالي.

٥٦. مفاهيم يجب ان تصحح : للشيخ محمد علوي المالكي.

٥٧. مقالات الكوثري : للشيخ محمد زاهد الكوثري.

٥٨. ملفوظات : المولوي اشرف على (اردو)

٥٩. مناقب ابن عربي : للشيخ ابراهيم بن عبد الله البغدادي.

٦٠. الموسوعة اليوسفية فى بيان ادلة الصوفية : للشيخ الخطار.

٦١. نزهة الخواطر وبهجة المسامع والنواظر : للشيخ عبد الحي بن فخر الدين الحسني.

٦٢. نشر المحاسن العالية فى فضل مشائخ الصوفية : للشيخ ابن اليافعي.

٦٣. النظام الخاص لاهل الاختصاص : للشيخ جدي الرفاعي.

٦٤. نوادر امدادية : نثار احمد فاروقي (اردو)

٦٥. اليواقيت والجواهر في بيان عقائد الاكابر : للشيخ الشعراني.

يا شفيع العباد خذ بيدي ✤ انت فى الاضطرار معتمدي
ليس لي ملجأ سواك اغث ✤ مسني الضر سيدي سندي
ليتني كنت ترب طيبتكم ✤ فالتثمت النعال ذاك قدمي

المولوى اشرف على تهانوى